★ கூறைகள்
★ காஞ்சிபுரம்
★ பட்டு வேட்டி
★ பிளவுஸ் வகைகள்
மற்றும்
கபமுகூர்த்த புடவைகளை
கலபமே தெரிவுசெய்ய
சோபனா
ரெக்ஸ்ரைல்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

இன்றைய அறிமுகம்
நாளைய நாகரீகம்
இறக்குமதி செய்யப்பட்ட
சாறிகள்,
றெடிமேட் ஆடைகளை
நவீன டிசைன்களில்
மனம் போல்
பெற்றுக்கொள்ள
சோபனா
ரெக்ஸ்ரைல்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 5: பிரமோதூத ஞூ வைகாசி மீ 09 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால்பிறை 27 (23-05-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 93

# ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு காலதாமதமானால் பாதக விளைவு!

## ஹமீத்திடம் புலிகள் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், மே 23

★ அரசமைப்புக்கான ஆறாவது திருத்தத்தை நீக்குதல்.
★ வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைத்து, தேர்தலை நடத்துதல்.

இந்த இரண்டையும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் அரசு செயலில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இல்லையேல், காலதாமதம் பல சிக்கல்கள், பாதகமான விளைவுகளை உருவாக்கும் - என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர், வடக்கு - கிழக்கு சமாதானக் குழுவின் தலைவரும், நீதி அமைச்சருமான ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீதிடம் நேற்று எடுத்து விளக்கினர்.

அமைச்சர் ஹமீதுக்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தூதுக்குழுவினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நேற்று சுமார் ஐந்து மணிநேரம் நீடித்தது.

நல்லூர்ப் பகுதியில் உள்ள ஒருவீட்டில் காலை பத்து மணிக்கு ஆரம்பமான பேச்சுக்கள் பிற்பகல் 2 மணிக்கே முடிவுற்றது.

அரசாங்கத்தரப்பில்அமைச்சர் ஹமீத் மட்டுமே பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தூதுக்குழுவில் தலைவர் திரு. சோ. மகேந்திரராசா (மாத்தயா) செயலாளர்நாயகம் திரு. யோகரத்தினம் யோகி, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம், யாழ். மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் திரு. பானு, மகளிர் முன்னணித் தலைவி செல்வி ஜெயா ஆகியோர் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சார்பில் பின்வரும் விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை ஆரம்பித்து ஒரு வருடத்துக்கு மேலாகி விட்டது. இந்தியப் படையினரும் வரதராஜப்பெருமாளும் இங்கிருந்து போய்விட்டார்கள். ஆனால் பேச்சுக்கள்மூலம் உருப்படியானபெறு

(2 ஆம் பக்கம் பார்க்க)



வண. பிதா லோங் அடிகளின் நினைவு முத்திரையை மாகாண தபால் அத்தியட்சகர் திரு. எஸ். எம். சேதுகாவலர் இரத்துச் செய்து யாழ். ஆயர். வண. தியோகுப்பிள்ளையிடம் வழங்கியபோது எடுக்கப்பட்டபடத்தை இடதுபுறத்திலும் — அதன் பின்னர் நடைபெற்ற நினைவுக் கூட்டத்தில் யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் உரையாற்றுவதையும், அருகில் யாழ். பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்க உப தலைவர் டாக்டர் ஜே.பி.ஸி பிலிப்ஸ் அமர்ந்திருப்பதை வலது புறப்படத்திலும் காணலாம். (படங்கள்:- கே.எஸ்.ஆர்)

## தமிழ்நாடு ஆளுநராக பர்னாலா

சென்னை, மே 23

தமிழ்நாடு ஆளுநராக திரு. சுர்ஜித்சிங் பர்னாலா நியமிக்கப்பட்டார்.

இவர் பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் ஆவார்.

புதுடில்லியில் ஜனாதிபதி மாளிகையில் இதுசம்பந்தமான அறிவிப்பு வெளிவந்தது. (இ-எ)

## குண்டு வெடிப்பு

ஹர்த்தால் தினமான திங்கள் இரவு திருகோணமலை நகருக்கு வெளியே குண்டு வெடிப்புச் சத்தம் ஒன்று கேட்டது.

இதனை அடுத்து இரவு ஒரு மணிவரை விட்டு விட்டு துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. இதனால் பொதுமக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது.

திங்களன்று திருகோணமலையில் ஹர்த்தால் முழு அளவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வீதிகளில் வாகனங்கள் ஓடவில்லை, அரசாங்க அலுவல்கள் இயங்கவில்லை. வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. (இ-155)

## பாடசாலை வினாத்தாள்களும் இனிஎழுத்துச்சீர்திருத்தத்தில்

### கல்வி துணை அமைச்சின் செயலர் உத்தரவு

கொழும்பு, மே 23

பாடசாலை மாணவர்களுக்கான வினாத்தாள்கள் இனி எழுத்துச் சீர் திருத்த அடிப்படையிலேயே தயாரிக்கப்பட வேண்டும்.

கல்வி துணை அமைச்சின் செயலாளர் 1990-5-12 திகதியிட்டு அனுப்பியுள்ள சுற்று நிருபம் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணகல்விச்செயலாளர்கள்மாகாண கல்விப்பணிப்பாளர்கள், கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர், பரீட்சைத்திணைக்களஆணையாளர் ஆகியோருக்கு இந்த சுற்ட்நிருபம் அனுப்பப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் மேலதிகக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும்விவரங்கள் வருமாறு:-

★ எழுத்துச் சீர்திருத்தத்தை சகல பாடசாலை மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்த

(7 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கில்

## இராணுவ நடவடிக்கை எதுவும் இல்லை என்று ஹமீத் மறுப்பு

### வழமையான துருப்புகள் இடமாற்றமே நடக்கிறதாம்

யாழ்ப்பாணம், மே 23

வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று நீதி அமைச்சர் ஜனாப். ஏ.சி. எஸ். ஹமீத் தெரிவித்தார். இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்பதை அவர் முற்றாக நிராகரித்தார்.

''வெறுமனே துருப்புகள் இடமாற்றம்'' (Turn Over of Troops) மட்டுமே நடப்பதாக அவர் சொன்னார்.

தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்படுவது, மற்றும் அடிக்கடி விமானங்கள் பறப்பது குறித்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தூதுக் குழுவினர் நேற்றைய பேச்சுக்களின் போது அமைச்சரிடம் பிரஸ்தாபித்தனர். அப்போதே அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றைய பேச்சுக்களின் போது பொதுவாக, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் பாதுகாப்புப் பிரச்சினைகள் பற்றிப் பேசப்பட்டதாக அறியவந்தது.

''சில இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்படுகின்றன; புதிய முகாம்கள் திறக்கப்படுகின்றன; துருப்புகள் குவிக்கப்படுகின்றன; ஹெலி, விமானங்கள் அடிக்கடி தாழப் பறந்து நோட்டமிடுகின்றன.'' இதன் அர்த்தம் என்ன என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தூதுக் குழுவினர் அமைச்சர் ஹமீதிடம் கேட்டனர்.

வெறுமனே ''துருப்புகள்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## மலையகத் தமிழரை நாடு கடத்தக் கூடாது; தொழிற் சங்கத் தீர்மானத்தில் ரஞ்சன் ஒப்பம்

கொழும்பு, மே 23

வினை விதைத்தவன்வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான்- என்று தெரியாமலா சொன்னார்கள்?

வினை விதைத்தவர் அதனைஅறுப்பதைப் பார்க்க பல காலம் காத்திருக்க வேண்டியதில்லை. இப்போதெல்லாம் அது உடனுக்குடனேயே நிகழுகிறது.

ஒரு லட்சம் மலையகத் தமிழர்களை நாட்டின் குடியகல்வு, குடிவரவுச் சட்டத்தின் பிரகாரம் நாடுகடத்த வேண்டும் என்று அராசங்கத் தரப்பில் விடாப்பிடியாக முதன் முதலில் முனைப்பாக நின்றவர், நிற்பவர் பெருந் தோட்டத் தொழில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தான்.

ஆனால் மலையகத் தமிழரை பலவந்தமாக நாடு கடத்துவதைக் கண்டித்தும், அதனை நிறுத்தக் கோரியும் அரசாங்க சார்பு தோட்டத் தொழிலாளர்சங்கம்கொண்டு வந்த தீர்மானத்தில் அவரே நேற்றுக்கையொப்பமும் இட்டார். ஆம். அந்தத் தொழிற் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் அவர் கையொப்பம் இட வேண்டியதாயிற்று.

ஆளுங் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் மலையகத் தொழிலாளருக்கானதொழிற் சங்கம் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் அதன் தலைவராக இருந்தவர் முன்னாள் தோட்டத் தொழில் துறை அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா.

அமைச்சர் பதவி பறிபோனதுடன் திரு. திசநாயக்கா தொழிற்சங்கத் தலைவர் பதவியையும் உதறித் தள்ளி விட்டார்.

அவரின் இடத்துக்கு- புதிய

[2 ஆம் பக்கம் பார்க்க]

## ஈ.பி.ஆர்.எல்.எவ்வுடன் பேசினால் அரசு - புலிகள் உறவு பாதிப்புறும்

### அமைச்சரிடம் எடுத்துச் சொல்லப்பட்டது

யாழ்ப்பாணம், மே 23

அரசாங்கம் ஈ.பி.ஆர்.எல். எவ்வுடன் பேச்சு நடத்துவது, விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் உள்ள நல்லுறவைப் பெரிதும் பாதிக்கும் என்று அமைச்சர் ஹமீத் மூலம் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈ. பி. ஆர். எல். எவ்வுடன் அரசு நடத்தும் பேச்சுவார்த்தை குறித்து எமது கடும் ஆட்சேபத்தையும் அதிருப்தியையும் தெரிவித்தோம்.

ஈ. பி. ஆர். எல். எவ்வுடன் பேச்சு நடத்துவது அவர்களைப் பொறுத்த விடயம். ஆனால் அது அரசு - விடுத

(7 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டாய நாடுகடத்தலை நிறுத்த புலிகள் வற்புறுத்து

யாழ்ப்பாணம், மே 23

மலையக மக்களை கட்டாயமாக நாடு கடத்துவதை நிறுத்தவேண்டும் என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அரசிடம் வலியுறுத்தி உள்ளது.

நல்லூரில் அமைச்சர் ஹமீதுக்கும் முன்னணியின் தூதுக் குழுவினருக்கும் இடையில் நேற்று நடந்த பேச்சுவார்த்தையின் போது இது விடயம் எடுத்துரைக்கப்பட்டது.

மலையக மக்களை பொலிஸாரும், ஆயுதப்படையினரும் துன்புறுத்துவதும் நிறுத்தப்பட வேண்டும் எனவும் தூதுக் குழுவினர் அமைச்சரிடம் வற்புறுத்தினர். [அ-உ]

## சுப நேரம்

23 - 5 - 90

புதன்கிழமை வைகாசி 09

சுபநேரம் ;
04.22 -05.52

இராகுகாலம்
11.52 - 01.22

## முச்சந்தி முரளி



அப்ப ...... ரஞ்சனாருக்கு ஆப்பு இழுத்த குரங்கின்ரை நிலை தான் ஏற்பட்டிருக்கு எண்டு சொல்லுங்கோ ...!

## புலிகளின் சிற்றூர் அவை தலைவர் சுட்டுக் கொலை!

### கல்முனையில் திங்கள் சம்பவம்

யாழ்ப்பாணம் மே 23

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சிற்றூர் அவைத் தலைவர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கல்முனைக் குடி சிற்றூர் அவையின் தலைவர் ஜனாப். ஆதம்பாவா என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் இரவு 8 30 மணியளவில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தேசிய துணைப்படை கலைப்பு

கொழும்பு, மே 23

1984 இல் அமைக்கப்பட்ட தேசிய துணைப்படையை அரசு படிப்படியாகக்கலைத்து வருகிறது.

இந்தப்படையில் ஆரம்பத்தில் எண்ணாயிரம் பேர் இருந்தனர்.

இந்தப்படைக்குப் பதில் அரசுத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் தோட்டங்கள் ஆகியவற்றுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கவனிக்க என்று புதிய தொண்டர்படை அணி ஒன்றை இலங்கை இராணுவம் உருவாக்கி வருகிறது.

இதுவரை ஆயிரத்து 800க்கு அதிகமான வீரர்கள் இப் புதிய படை அணிக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தேசிய துணைப் படையில் பணி புரிந்தவர்களில்இருந்தே இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தேசிய துணைப்படையில் முன்னர் பணி புரிந்தவர்களில் ஆயிரத்துக்கு அதிகமானோர் இராணுவத்திலும் அதன் தொண்டர் பிரிவிகளிலும் சேர்க்கப்பட்டனர். [இ-எ]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த [Crimson Globe] பீட்றூட் விதை, விவசாய ஆய்வுகூட அனுமதி பெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது விற்பனைக்கு உண்டு பிள்ளையார், 259' காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3490)

றெலிவங்கன் T.V. 26 அங்.கலர், விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 15,000. றேடியோ மனுவல், 131, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (3497)

### தேவை

விறகு கொத்துவதற்குஆட்கள் தேவை. கூலி அதிகரிக்கப்பட்டுள்ளது 3 நேரம் தேநீரும் வழங்கப்படும் தம்பிஐயா விறகுசாலை 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார் பண்ணை. (13230)

### மணப்பெண் தேவை

லண்டனில் நிரந்தர வேலை செய்து மாதம் 2500 பவுண் உழைக்கும் 42 வயது மணமகனுக்கு மணப்பெண் தேவை. எம்மிடம் எல்லாக் கோணங்களிலும் மணமக்கள் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (13220)

### புலமைப் பரிசில் பரீட்சை

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க ஆண்டு – 5 புலமைப் பரிசில் வகுப்புக்கான கணிதம், தமிழ் மாதிரிப் பரீட்சைகள் பிரதி சனிக்கிழமையும் மாலை 3 00-6.00 வரை நடைபெறும். வெளி மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர் விபரங்களுக்கு எலைற் இன்ஸ்ரிரியூட் (வண்ணார் பண்ணை தபால் நிலையம் முன்பாக) 99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி-4529)

### தவறி விட்டது

562421602V இலக்கமுடைய ஞானப்பிரகாசம் அமிர்தநாதன் என்பவரது அடையாள அட்டை சாவகச்சேரி பஸ் நிலையத்தில் 15-5-90 அன்று தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் ச.ஆறுமுகம், ஆஸ்பத்திரி வீதி, வாடியடி, பூநகரி எனும் விலாசத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். (3495)

### கடை வாடகைக்கு

சுன்னாகம் பழைய பொலிஸ் நிலையத்திற்கு அண்மையிலுள்ள கடை வாடகைக்கு விடப்படும். அத்துடன் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு லீலா பான்சி பலஸ், 105 A, K. K. S. றோட், சுன்னாகம். (3496)

### வரலாறு

வெளிவந்து விட்டது! விற்பனையாகின்றது!! வரலாறு- ஆண்டு 6; வரலாறு- ஆண்டு 11 ஆக்கியோன்:- ந. தர்மபாலன் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (3479)

### குமுதம்

விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன. 10- 5- 90 இதழில் குழந்தை நட்சத்திரம் ஷாலினியின் பேட்டியும் 17-5-90 இதழில் ஸ்ரீதேவியை பேட்டி காண்கிறார் கங்கை அமரன் விலை ரூபா 7/- வியாபாரிகள் தங்கள் ஓடரை பதிவு செய்து கொள்ளலாம் விபரங்களுக்கு பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (3484)

## வீதி திருத்த வேலைகள்

கிளிநொச்சி மே 23

அல்லிப்பளை - புலோப்பளை வீதி திருத்தவேலைகள் மிக விரைவில் ஆரம்பமாக உள்ளன. இதற்காக 2 லட்சத்து 97 ஆயிரத்து 900 ரூபா பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியின் கீழ் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகரால் ஒதுக்கப்பட்டு உள்ளது. (இ-76)

## மலையகத் தமிழரை - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவராக - புதிய தோட்டத் தொழில் அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா நேற்று தெரிவு செய்யப்பட்டார்.

சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைமைக் காரியாலயத்தில் திரு. ரஞ்சன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

மலையகத் தமிழர்களைப் பலவந்தமாக நாடுகடத்துவதைக் கண்டித்தும், அதனை நிறுத்தக் கோரியும் கூட்டத்தில் ஒரு பிரேரணை கொண்டு வரப்பட்டது.

தொழிற்சங்கத்தின் உதவிச் செயலாளரும், உவா மாகாண சபையின் ஐ. தே. க. உறுப்பினருமான திரு. கே. வேலாயுதம் பிரேரணையை முன்மொழிந்து பேசினார்.

அதனை மத்திய மாகாண சபை ஐ. தே. க. உறுப்பினரும், இ. தே. தோ. தொழிலாளர்சங்க உப தலைவருமான திரு. கே. புத்திரசிகாமணி வழிமொழிந்து பேசினார்.

கட்சிச் செயலாளர் திரு. ராஜா செனிவிரத்னாவும் பிரேரணையை ஆதரித்துப் பேசினார். அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா முன்னிலையிலேயே பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தொழிற்சங்கத் தலைவர்என்றமுறையில் திரு. ரஞ்சன் விஜேரத்னா ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தில் தமது கையொப்பத்தை இட்டார்!!

### Thanks for St. Jude

Oh, St. Jude we thank you for the great help and blessings that you have granted us through Jesus Christ Almighty. When we were so desperate.

[3617]

# தமிழர் உரிமையை வழங்குமாறு இலங்கை அரசைத் தூண்டுங்கள்

## சிங்கள பாதயாத்திரிகர் மத்தியில் உரை

வவுனியா, மே. 23

''கடந்த காலங்களில் இருந்தே அடக்குமுறைகளுக்கு ஆளாகிவந்துள்ள எமது நியாயமான உரிமைகள் வழங்கப்படுவதற்கு தென்பகுதி மக்களாகிய நீங்கள் இலங்கை அரசைத் தூண்டவேண்டும். ஒற்றுமையையும் அன்பு, அமைதி சமாதானத்தையும் வலியுறுத்தி பாதயாத்திரை மேற்கொண்டு மதவாச்சியிலிருந்து வவுனியாவுக்கு வந்துள்ள உங்களது முக்கிய பாரிய கடமை இதுவாகும்''

இவ்வாறு வவுனியா கந்தசாமி கோவில் வந்து குழுமிய மதவாச்சிப் பகுதியைச் சேர்ந்த சுமார் ஆறாயிரம் பொது மக்கள் மத்தியில் உரையாற்றிய வைரப்புளியங் குளம் சிற்றூர் அவை முக்கியஸ்தர் திரு. க. சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

வடமத்திய மாகாணசபையின் மதவாச்சி பகுதி உறுப்பினரான திரு. நிசங்கதிசாநாயக்கவினால் ஒழுங்கு செய்யப்பட்டு அவரது தலைமையில் இந்த அமைதிக்கான சமாதான பாதயாத்திரை ஞாயிறன்று பிற்பகல் ஒரு மணியளவில் வவுனியாவை வந்தடைந்தது.

சிங்கள, முஸ்லிம் மக்களோடு பௌத்த பிக்குமார்களும் இந்த யாத்திரையில் வந்திருந்தார்கள். இவர்களை வவுனியா - கண்டிவீதியில் வர்த்தக, நகரமக்களின் பிரமுகர்களும் புலிகளின் பிரதிநிதிகளும் வரவேற்றார்கள்.

கந்தசாமி கோவிலை வந்தடைந்த திரு. திசாநாயக்காவையும் குழுவினரையும் ஆலய பிரதம குருவான பிரம்மஸ்ரீ இ. பாலச்சந்திர குருக்கள் தலைமையிலான பிரமுகர்கள் வரவேற்றார்கள்.

விசேட பூஜையின் பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய திரு. சிவசுப்பிரமணியம் மேலும் தெரிவித்ததாவது:-

அமைதியையும் சமாதானத்தையும் வலியுறுத்தும் இத்தகைய பாதயாத்திரைகளை தொடர்ந்தும் மேற்கொள்ளுங்கள். நாம் அதை வரவேற்கின்றோம். மறுக்கப்பட்ட எமது உரிமைகள் நியாயமான முறையில் எமக்கு வழங்கப்படுவதற்கு இத்தகைய யாத்திரைகளின் மூலம் வழியேற்படுத்துங்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மாகாணசபை உறுப்பினர் திரு. நிசங்க திசாநாயக்கா பேசுகையில், ஒற்றுமையாகவும் சகோதரத்துவத்துடனும்வாழ்ந்து வந்த எம்மிடையே-அதாவது சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்டுள்ள விருப்பத்தகாதபிளவு, வெறுப்புகளை அகற்றி ஒற்றுமையாக வாழ்வதற்கு ஓர் ஒளிவிளக்காக இந்த பாதயாத்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## ஆறாவது - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேறுகள் எதுவும் கிடைக்கவில்லை.

தொடர்ந்து பேசுவதைவிட செயலில் செய்து காட்டுவது தான் முக்கியம் என்பதை ஸ்ரீலங்கா அரசு உணரவேண்டும். தமிழர் பிரதேசத்தில் ஜனநாயகத் தேர்தல் நடத்துவதற்கும், விடுதலைப் புலிகள் தேர்தலில் பங்குபற்றுவதற்குமான புறநிலைகளை உருவாக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் –

ஒருவருடகால பேச்சுக்களின்போது இறுதியாக நாங்கள் இரண்டு விடயங்களை – கோரிக்கைகளைத்தான் – அரசுக்கு முன்வைத்தோம் –

★ அரசமைப்பின்ஆறாவது திருத்தத்தை எவ்வளவு விரைவில் நீக்க முடியுமோ அவ்வளவு விரைவில் நீக்குவதற்கான வழிவகைகளைச் செய்யுங்கள் என்று கோரினோம் –

★ மாகாணசபையைக் கலைத்து மாகாண சபைக்கான தேர்தல்களை உடன் நடத்துங்கள் என்று கேட்டோம் –

ஆனால் இந்த இரண்டுவிடயங்களையும் செய்வதற்கு அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை. காலதாமதமாகிக்கொண்டிருக்கிறது –

இதனால் இங்கு அரசியல் வெறுமைநிலை நீடிக்கின்றது.

அரசியல் வெறுமைநிலை நீடித்தால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அரசு உணர வேண்டும் –

### தவறினால் பாதகமான விளைவுகள்

ஒரு குறிப்பிட்ட காலஎல்லைக்குள் இந்த இரண்டு விடயங்களையும் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்கத் தவறுமாயின் பல சிக்கல்கள் பாதகமான விளைவுகள் ஏற்படும் –

''பந்து இப்போதுஸ்ரீலங்கா அரசின் களத்தில்'' உள்ளது. இப்போதைய சூழலில் நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு ஸ்ரீலங்கா அரசைச் சேர்ந்தது–

இவ்வாறு தூதுக் குழுவினர் தெரிவித்த அம்சங்களை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவருவதாக அமைச்சர் ஹமீத் தெரிவித்தார். [அ-உ]


ஒல்லாந்து (HOLLAND) நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு விமானம் மூலம் தருவிக்கப்படும்

ரெட் கிரியோல

(RED CREOLE)

பெரிய வெங்காய விதை

(ஆகக் குறைந்தளவு 85% விளை சக்தியுடையது)

25 கிலோ பொதிகளில்

இப்பொழுது விற்பனைக்கு கிடைக்கின்றது.

வியாபாரிகளே உங்கள் தேவைகளுக்கு

தொடர்பு கொள்ளுங்கள்:

ஈஸ்வரன் பிரதர்ஸ்

267, செட்டியார் தெரு, கொழும்பு - 13.

தொலைபேசி: 422864, 432599, 422744, 431741.



Computer அறிவைப் பெற்று யுகத்தில்

நீங்களும் ஒரு அங்கத்தவராகுங்கள்!

COMPUTER STUDIES

Reg No. 16063

★ பல்கலைக்கழக மாணவர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்

PASCAL: Suitable For Physical Science and Engineering Students.

ஆரம்பம்: 25-05-90
மாலை 6.00 மணி

LOTUS 1-2-3: Suitable For B. Com, Management Students and Accountants

ஆரம்பம்: 25-05-90
காலை 9.00 மணி

★ ஒவ்வொரு பிரிவிலும் முதல் 10 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

மேலதி விபரங்களுக்கு:

Institute of Computer Studies

No. 60, Vidanes Road, Chundikuli, Jaffna, Sri Lanka.

[3621]



வெளிவந்துவிட்டது — விற்பனையாகின்றன

இலங்கை நிருவாக சேவை (SLAS)

போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டி

★ நுண்ணறிவு ★ கிரகித்தல்
★ விடய ஆய்வு / பொது வினாத்தாள்

பயிற்சிகளுடன் நடைபெற்ற பரீட்சைகளின் 7 வருட மாதிரி வினாத்தாள்களையும் - விடைகளையும் உள்ளடக்கியது.

அஸ்ரன் வெளியீடு விலை ரூபா 88.00

கேட்டு வாங்குங்கள்: ★ மட்டுப்படுத்தப்பட்ட ★ திறந்த

யாழ்நகரில் எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மொத்தமாகப்பெற:

ASTAN Institute

166/1, Hospital Road, Jaffna.

(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)


[சி-4561]



வழிபாட்டு தலங்கள், வீடுகள், மதில் சுவர்கள் ஏனைய கட்டிடங்களையும் புதுமெருகுடன்



AMTRAD®
BALUSTRADES
Perfect symmetry.
Classic designs.
AMTRAD® Building on Achievement
AH ARULS HANDICRAFT
107, David Road, Jaffna.



அழகுபடுத்த அதி நவீன தயாரிப்புகளான தூண்கற்கள் (கடைச்சல் முறை) கொங்கிறீற் வளைவுகளை பெற்றுக் கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

அருள்ஸ் 107, டேவிற் வீதி, -:- யாழ்ப்பாணம்.

[சி-4560]



## தேவை

நீங்கள் வசீகரமாகப் பேசி, கேட்பவர்களை வசமாக்கக் கூடிய சக்தி உடையவர்களா?

சந்தைப்படுத்தலுக்குத் தேவையான தந்திரோபாயமும், நுணுக்கங்களும் கைவருமா?

அப்படியானால் உடனே விண்ணப்பியுங்கள்.

மாதாந்த சஞ்சிகைகளை பாடசாலைகள், ஆலயங்கள், மற்றும் மக்கள் கூடும் இடங்கள் எல்லாவற்றுக்கும் எடுத்துச் சென்று விற்பனை செய்வதற்கு ஆட்கள் தேவை.

மாதாந்த அலவன்சும் விற்கும் பிரதிகளுக்குத் தக்கபடி கமிஷனும் வழங்கப்படும்.

25. 5. 1990 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

ஆளணி முகாமையாளர்,
நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
நிறையரியர் மன்அளியர் என்னாது காமம்
மறையிறந்து மன்று படும்.

**பொருள்:**
இவர் நெஞ்சை நிறுத்தும் நிறை இல்லாதவர், மிகவும் இரங்கத்தக்கவர் என்று கருதாமல் காமம் மறைத்திருந்தலைக் கடந்து மன்றத்திலும் வெளிப்படுகின்றதே.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
23 - 05 - 1990    த. பெ இலக்கம் 25


## முத்திசை அணி வேண்டும்

மலையக மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனவாதம், அடக்குமுறை என்பவற்றைக் கண்டித்து வடக்கு - கிழக்குத் தமிழ்ப் பிரதேசம் எங்கும் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஹர்த்தால் பூரண வெற்றி அளித்தது.

ஈழத்தமிழ்ப் பிரதேசம் பரந்து விரியும் எட்டு மாவட்டங்களிலும் வதியும் தமிழ் மக்கள், மலையகத்தில் வாழும் தமது சகோதரர்களுக்கு அவர்களின் உரிமைப் போராட்டங்களில் உதவுவார்கள், ஆதரவு அளிப்பார்கள் என்பதை திங்கள் ஹர்த்தால் எடுத்துக் காட்டியிருக்கிறது. வாழும் பிரதேசம் வேறானாலும் இனத்தாலும், மொழியாலும் தமிழர்கள் ஒருவரே என்ற ஒருமைப்பாட்டை வடக்கு—கிழக்கு வாழ் தமிழர்கள் நிரூபித்துக்காட்டியுள்ளார்கள்.

மலையகத் தமிழர்கள் சிங்களப் பிரதேசங்களில் வாழலாம். பெரும்பான்மைச் சிங்களவர்களிடையே சிறுபான்மையினராகக் குடியிருக்கலாம், அதற்காக அவர்களைக் கண்டபடி சீண்டவோ, அவர்களின் உரிமைகளைப் பறிக்கவோ சிங்கள மக்களுக்கு உரிமை எதுவும் இல்லை. அப்படி உரிமைகளை தமது கையில் எடுத்துக் கொள்ளவும் அனுமதிக்க இயலாது—

மலையகத் தமிழர்களைச் சீண்டினால், அவர்களை அடக்க முயன்றால் அது தம்மைச் சீண்டியதாக, தீண்டியதாகவே வடக்கு—கிழக்கு வாழ் மக்கள் கருதுவார்கள். தாம் வேறு அவர்கள் வேறு என்று அவர்கள் நினைக்கவில்லை. —என்ற செய்தியை கடந்த திங்கட்கிழமைக் ஹர்த்தால் சாட்சி சகிதமாக அரசுக்கும், சிங்கள மக்களுக்கும் எடுத்துக் காட்டி உள்ளது

இந்த ஒற்றுமையும், ஒருமைப்பாடும் என்றென்றும் பேணிக்காக்கப்பட வேண்டும்.

தமிழர்கள் ஒற்றுமை இல்லாதவர்கள். தமக்குள்ளேயே பல பிரிவுகளைக் கொண்டவர்கள். பிரதேச வேறுபாடு காட்டி ஒரு சாராரை மறுசாரார் அடிமை, குடிமைப் படுத்துபவர்கள். எந்த விடயத்திலும் இரண்டு பட்டு நிற்பவர்கள். ஆலய பரிபாலனத்துக்குக் கூட அண்ணன் தம்பி அடிபட்டுக்கொள்பவர்கள். தாமே மேலோங்கிகள் என்று ஒவ்வொருவரும் தலைக்கனம் பிடித்து ஆடி, காலத்தை வீணாக்குபவர்கள். உண்மையான முதலாளித்துவம் அவர்கள் மத்தியிலேயே நிறைய உண்டு.

இவ்வாறும், இன்னும் பல வகைகளிலும் தமிழர்களுக்குக் கெட்ட பெயர் உண்டு. இந்தவித அவமானமும், அபகீர்த்தியும் காரணம் இல்லாமல் வரவில்லை என்பது கடைந்தெடுத்த கசப்பான உண்மை!

எனினும் தமிழர்கள் இன்னும் திருந்தியதாக இல்லை. குறுகிய வட்டத்திற்குள்ளேயே நின்று குட்டித் தலைவர்களாக வரவே தொடர்ந்தும் உழன்று கொண்டிருக்கிறார்கள்.

உலகின் பல பாகங்களிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்று பெருமைப்படுகிறோம். ஆனால் நாட்டுக்கு நாடு வாழும் தமிழர்களிடையே நெருங்கிய உறவும், போதிய தொடர்பும் உண்டா?

வீட்டைத் திருத்தி நாட்டைத் திருத்து என்பது வழிகாட்டு மொழி. வேறு நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு இடையே நெருக்கத்தைக் கொண்டு வருவதற்கு முன்னர் எமது வீட்டில் — ஈழத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் — வாழும் தமிழர்களிடையே பிணைந்த நெருக்கமும், இணைந்த நல்லுறவும் தேவை.

இது குறித்து, ஒரு பிரதேசத்தில் வாழும் தமிழர்கள் என்றில்லாமல், எல்லாப் பிரதேசங்களிலும் வாழும் தமிழர்கள் ஏனைய பகுதிகளில் வாழும்தமிழர்களுடன் நெருங்கி உறவு பூணவேண்டும். அடுத்தவர் துன்பத்திலும், இன்னலிலும் பங்கு கொள்ளப் பழக வேண்டும். அந்த உறவும், நெருக்கமும் வெறும் வாயாலும், பேனாவாலும் உதிரக்கூடாது. மனதாலும், செயலாலும் வடிவம் பெற வேண்டும்.

ஈழத்தில் தமிழன் எங்கு வாழ்ந்தாலும், அவனுக்குக் கைகொடுக்க, ஆதரவு தர மற்றத் தமிழர்கள் வருவார்கள் என்ற எண்ணம் எங்களை ஆளநினைக்கும் அரசுக்கும், அதன் சிற்பிகளான சிங்கள மக்களுக்கும் உணர்த்தப் படவேண்டும்.

திங்கட்கிழமை நடந்த ஹர்த்தால் அதற்கு ஓர் ஆரம்பம். அந்த ஆரம்பம் அரசை நிலை குலையச் செய்யும் அளவுக்கு எல்லாத் திசைகளிலும், வடக்கிலும் — கிழக்கிலும் — மலையகத்திலும்—வளரவேண்டும். தாக்கம் தரும் ஒரு முத்திசை சக்தியாக—அணியாக திரளவேண்டும்.

## வீதிகளைத் திருத்த மக்கள் தாமாகவே முன் வர வேண்டும்

உரும்பிராய், மே. 22

''சீரற்று இருக்கும் எமது கிராம வீதிகளை அரசு திருத்தும் என எதிர்பாராது தாமே இவற்றைச்செப்பனிட மக்கள் முன்வர வேண்டும். இதற்கு மனிதப் பணத்தைவிட மனித சக்தியே அதிகம் தேவைப் படும்.

உரும்பராய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம் அண்மையில் நடத்திய வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சிறப் புரையாற்றிய கிராம சேவையாளர் திரு. வை. ஜெகதாஸ் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், வட்டியில்லாக் கடன் கொடுத்து உதவும் இச்சங்கத்தின் செயற்பாடு சிறந்த முன்மாதிரி எனவும், இத்துடன் நில்லாது கோழி, ஆடு, மாடு வளர்ப்பு என்பவற்றை ஊக்க சங்கம் ஆவன செய்ய வேண்டும் எனவும் வேண்டிக்கொண்டார்.

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. செ. ஐயாத்துரையின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சிறுவர் பராமரிப்பு நிலையம், பாலர் பாடசாலை ஆகியன எனவும் அமைக்கப் பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. (ப)

யாழ். சனசமூக நிலையங்கள்

# நன்கொடைப் பணம் கிடைப்பதில் இருந்து வரும் தாமதம் நீங்கும்

### உதவி ஆணையாளர் சுற்று நிருபம்

கொழும்புத்துறை, மே23

சனசமூக நிலையங்களுக்கு அரசாங்க நன் கொடைப் பணம் கிடைப்பதில் இருந்து வரும் தாமதம் நீங்கும்.

உள்ளூராட்சித் திணைக்களத்தால் யாழ் மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படும் வருடாந்த அரச நன்கொடைப் பணம் உடனுக்குடன் அச்சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட வேண்டும். என்று யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா யாழ். மாநகர ஆணையாளர், பிரதேச சபைகள் நகரசபைகளின் விசேஷ ஆணையாளர் ஆகியோரை சுற்று நிருபம் மூலம் கோரி உள்ளார்.

சனசமூக நிலையங்களுக்கு உள்ளூராட்சித் திணைக்களம் வழங்கிவரும் அரச நன் கொடைப் பணம் உள்ளூராட்சி மன்றங்களால் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை என்று சனசமூக நிலையங்கள் முறையீடுகள் செய்து வருகின்றன என்று யாழ். மாவட்ட உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (இ- 30)

வாழ்க்கைத் திறன்:

## பயிற்சியும் கருத்தரங்கும்

தம்பலகாமம், மே 23

வாழ்க்கைத்திறன் கல்வி அதிகாரிகளுக்கான பயிற்சியும், கருத்தரங்கும் அண்மையில் திருகோணமலை இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

3 நாள் நடந்த இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு கே. தியாகராஜா கலந்து கொண்டார்.

முதற்தடவையாக கல்வித் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கருத்தரங்கில் 23 ஆசிரியர்கள் கலந்து கொண்டார்கள். இறுதி நாளன்று கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (இ-155)

### பொலிஸ் விடுதியில் திருட்டு

திருகோணமலை மே 23

சிறிமாபுரம் காவல் நிலைய விடுதியில் சம்பளப் பணம் திருடப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தில் றிசேர்வ் பொலீஸ்காரர் ஒருவரது 1520 ரூபா, அவரோடு தற்காலிகமாகத் தங்கியிருந்த அவரது உறவினரது 300 ரூபா வேறொரு பொலீஸ் கான்ஸ்டபிளின் 500 ரூபா ஆகியவையே திருடப்பட்டுள்ளன. (இ-155)

# வேலணை உ. அ. அதிபர் பிரிவில் வீடமைப்பு நகர நிர்மாணச் சட்டம்

### ஜூன் முதல் அமுலுக்கு வரும்

அனலைதீவு, மே. 23

நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய பகுதிகளைஉள்ளடக்கிய வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜூன் 1ஆம் திகதி தொடக்கம் வீடமைப்பு நகர நிர்மாண அபிவிருத்திச் சட்டம் அமுல் செய்யப்படும்.

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமுல் செய்யப்படவேண்டிய செயற் திட்டங்கள் குறித்து கடந்த 17ஆம் திகதி விஷேச ஆணையாளர் திரு. எஸ். கந்தசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்டமுடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டம் உதவி அரசாங்க அதிபர் பணிமனை அலுவலகத்தில் நடைபெற்றது.

ஊர்காவற்றுறை மேற்பார்வைச் சுகாதாரப் பரிசோதகர் பிரதேச சபை நிர்வாக அதிகாரி, புங்குடுதீவு, நயினாதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, சுகாதார பரிசோதகர்கள், நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு பிரதேச சபை உப அலுவலகப் பொறுப்பாளர்கள், அவ்வப் பகுதி தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் கூட்டத்தில் பங்கு பற்றினர்.

கூட்டத்தில் வீடமைப்பு நகர் நிர்மாணச் சட்டம் அமுல் செய்தல், சட்டபூர்வமான இறைச்சி வெட்டும் நிலையங்கள் — கடைகள் அமைத்தல், குடி தண்ணீர் வழங்கல் ஆகியன பற்றி ஆராயப்பட்டது.

அப்போதே வீடமைப்பு நகர நிர்மாண அபிவிருத்திச் சட்டத்தை ஜூன் முதல் அமுல் நடத்த முடிவு செய்யப்பட்டது.

இதன்படி புதிதாக கட்டடங்கள் அமைத்தல், மீள அமைத்தல், மாற்றியமைத்தல், எல்லைச் சுவர்கேற் கட்டல் ஆகியவற்றுக்கு முன் அவ்வப்பகுதி சுகாதாரப் பரிசோதகர்கள், உப அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோரோடு தொடர்பு கொள்ள வேண்டும்.

அதற்குரிய வரை படங்கள் விபரங்கள் ஆகியவற்றை அவ்வப் பகுதி உப அலுவலகங்களில் பெறப்படும் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்துசமர்ப்பிக்க வேண்டும்.

வேலணை பிரதேச சபை விசேஷ ஆணையாளரின் எழுத்து மூலமான அனுமதி பெற்ற பின்பே கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டும்.

இது விடயமாக பொதுமக்களுக்கு முன் அறிவித்தல் கொடுக்கப்படும். இப்பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் புதிதாகக் கட்டப்பட்டு முடிவுறாத கட்டடங்களுக்கும், இனிமேல் கட்டப் போகும் கட்டிடங்களுக்கும் 1 - 6 - 90 முதல் கட்டட விண்ணப்பங்கள் சமர்பிக்க வேண்டும்.

மேற் கண்டவாறு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ-18)

மருதங்கேணி மின் இணைப்பு:

## ரூ. 9 லட்சம் தாமதக் கட்டணம் யாழ். செயலகம் செலுத்தாது

யாழ்ப்பாணம், மே 22

மருதங்கேணி மின் இணைப்பு வேலை தொடர்பாக மின்சாரசபைக்கு வழங்க வேண்டிய தாமதக் கட்டணமான ஒன்பது லட்சம் ரூபாவை யாழ் செயலகம் செலுத்த வேண்டியதில்லை.

மின்சாரசபைத் தலைவருக்கும், அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டுக்கும் இடையில் ஏற்பட்ட பேச்சுக்களை அடுத்து இந்த இணக்கம் ஏற்பட்டது.

89 ஆம் ஆண்டு பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் மருதங்கேணி மின் இணைப்பு வேலைகளுக்கு யாழ் செயலகம் மின்சாரசபைக்கு 25 லட்சம் ரூபா வழங்க வேண்டியிருந்தது. அப்பணத்தை 31-3-90க்கு முன்பாக வழங்க வேண்டும் என்று கட்டுப்பாடும் விதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் செயலகத்தால் குறிப்பிட்ட திகதிக்கு முன்பாக பணம் வழங்க முடியாது போனது

இதன் காரணமாக தாமதக் கட்டணமாக 9 லட்சம் ரூபா வழங்க வேண்டும் என்று மின்சாரசபை கோரி வந்தது.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இது விடயமாக மின்சாரசபைத் தலைவருடன் பேச்சு நடத்தியதன் பயனாக இந்தப்பணம்வழங்க வேண்டியதில்லை என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. (இ-3)

### சஞ்சிகை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் மே 23

விரிவுரையாளர் திரு. பா. பாலச்சந்திரனின் 'வர்த்தக உலகம்' காலாண்டு சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியை யாழ். பல்கலைக் கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் தொடக்கி வைப்பார்.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. கஜேந்திரா வரவேற்புரையையும், யாழ். பல்கலைக் கழக வணிக முகாமையியற்றுறைத் தலைவர் பேராசிரியர் எஸ். ராஜரட்ணம் அறிமுகவுரையையும், யாழ். வர்த்தக கல்வி அதிகாரி திரு. எஸ் சிவராசா வெளியீட்டுரையையும், சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி கி. வீரசிங்கம். செல்வி யோ. முருகேசு ஆகியோர் ஆய்வுரைகளையும் நிகழ்த்துவார்கள். (இ-7)

### வாசகர் திருமுகம்

#### யாழ்ப்பாணம் பிரதான வீதி

ஓர் காலத்தில் யாழ். பிரதானவீதியும் அதனைச் சூழவுள்ள குறுக்கு வீதிகளும் எவ்வளவு சுத்தமாக இருந்தன. இன்று இது பழங்கதையாகி விட்டது.

இவ்வீதிகளைச் சுற்றி காலை, மாலை, இரவு என்று எந்தநேரம் என்றில்லாமல் ஒரே பன்றிகள் கூட்டம். நாய்களைப் பிடிக்கத்தெரிந்த யா. ம. சபைக்கு ஏன் பன்றிகள் கூட்டம் கண்ணுக்குத் தெரியவில்லை? இன்று பெரும்பாலான குழந்தைகள் மூளைக்காய்ச்சலுக்கு உள்ளாவதற்கு பன்றிகளும் முக்கிய காரணி என்பது மாநகர சுகாதார வைத்திய அதிகாரிக்குத் தெரியாதா?

மற்றைய இடங்களிலெல்லாம் 'ரியூப் பல்புகள்' பொருத்தி இரவைப் பகலாக்க முயற்சி செய்யும் யா. மா. ந. சபை பறங்கித் தெருவை' மட்டும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடாத்துவது ஏன்?

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்தெருவில் இரண்டுபெரிய கல்லூரிகள் இருக்கின்றன. ஒன்று யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, மற்றையது யாழ் மத்திய கல்லூரி. காலையில் 7 மணி தொடக்கம் 8.30 மணி வரையும் நண்பகல் 12 மணிமுதல் பி. ப. 4மணிவரையும் இந்தத் தெரு 'ஜே' 'ஜே' என்று சிறுவர், சிறுமியராலும் கல்லூரி மாணவ, மாணவிகளாலும் மற்றும் ஆசிரியர் பெற்றோர்களாலும் அல்லோல கல்லோலப்படும்.

ஆனால் இப்பொழுது எந்த நேரம் பார்த்தாலும் கச்சேரி, அரியாலை ஆகிய இடங்களுக்குச் செல்லும் மினி பஸ்கள் இந்த றோட்டையே பாவிக்கின்றன. எப்பொழுதும் மிக மிக வேகமாக ஒருவரை ஒருவர் முந்துவதுபோல ஓடுகின்றன. ஆகவே மாநகர சபை இதற்கொரு முற்றுப் புள்ளி இடுமா?

மு. க. இரவீந்திரன்
4ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

#### மினிவான் சேவை

யாழ் - ஊர்காவற்றுறை மினிவான் சேவையிலீடுபடுபவர்கள் பிரயாணிகளை அசௌகரியபடுத்தி பணத்தை மட்டும் பிடுங்குவதில் கண்ணாக இருக்கின்றார்கள்.

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து சரம்பொன் வேளாங்கண்ணி ஆலயத்திற்கு சென்றவர்கள் அவ்வாறு பாதிக்கப்பட்டனர்.

வேளாங்கண்ணி ஆலயத்திற்கான கட்டணத்தை வாங்கிக் கொண்டு வாகனம் பழுதடைந்து விட்டதாகக் கூறி பிரயாணிகள் ஊர்காவற்றுறையில் இறக்கி விடப்பட்டனர்.

பிரயாணிகள் வேறொரு வாகனத்தில் கட்டணம் கொடுத்து ஆலயத்திற்குச் சென்று திரும்ப நேர்ந்தது.

ப லிங்கம்,
யாழ்ப்பாணம்.

## செய்திக்கொத்து

### வீதி இன்னமும் திருத்தப்படவில்லை

நெடுந்தீவு மே 23

மோசமான நிலையில் உள்ள நெடுந்தீவின் பிரதான வீதியைத் திருத்தும் நடவடிக்கைகள் எதுவும் இன்னமும் எடுக்கப்படவில்லை. இந்த வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுத்தாபனங்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்தும் கூட இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாது குறித்து பொதுமக்கள் வருத்தம் தெரிவித்தனர். (இ-111)

### மோட்டார் இயந்திரம் அன்பளிப்பு

கொழும்புத்துறை மே 23

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்தினர், பன்னாலை சேர். கனகசபை வித்தியாசாலைக்கு மோட்டார்இயந்திரமொன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

சமாசத்தினரின் இவ்வுதவியால் இப்பாடசாலையில் நீண்டகாலமாக இருந்துவந்த குடிநீர்ப் பிரச்சனை தீர்ந்துள்ளது. (இ-30)

### வாழ்த்து

கொக்குவில் மே 23

யாழ். மாவட்ட புதிய சாரணர் ஆணையாளராக திரு. ஆ. சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டதையிட்டு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை அவருக்குத் தனது பாராட்டுக்களையும், வா[illegible]களையும் தெரிவித்துள்ளது. (இ-69)

### கண் சிகிச்சை

பட்டிருப்பு மே 23

காத்தான்குடி - அல்ஹாஜ் அஷ்ஷஹீத் அஹமது லெவ்வை ஞாபகார்த்த நிறுவனம் அண்மையில் மூன்று தினங்களுக்கு கண் சிகிச்சை முகாமொன்றை காத்தான்குடியில் நடத்தியது. கண் சிகிச்சைக்காக வந்த 500 க்கு மேற்பட்ட நோயாளர்கள் இம் முகாமில் சிகிச்சை பெற்றுச் சென்றதாக நிறுவனத்தின்செயலர் ஜனாப். எம். எச். முஹம்மத் தெரிவித்தார். (க-121)

### நகுலன் நினைவாக குழாய்க் கிணறு

கைதடி மே 23

கல்வயலில் வீர மரணமடைந்த வீர வேங்கை கப்டன் நகுலன் நினைவாக இப்பகுதியில குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இக் கிணற்றின் மூலம் கல்வயல் பகுதியில் நிலவும் குடிநீர்ப்பிரச்சனை தீரும் என எதிர்பார்க்கப்படுகின்றன.

நகுலனின் 2 ஆம ஆண்டு நினைவு தினமான நாளை 24 ஆம் திகதி இக் குழாய்க் கிணறு திறந்துவைக்கப்படும். (இ-74)

### நூல் வெளியீடு

குருநகர் மே 23

அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் இயற்றிய ''ஸ்ரீ நாகவரத நாரயணர் பிள்ளை தமிழ்'', ''கண்ணன் வந்த வண்ணம்'' ஆகிய இரு நூல் [illegible] வெளியிடப்பட உள்ளன. (க-51)

### பாடசாலைக்கு ரூ. 1 லட்சம் உதவி

மானிப்பாய், மே. 23

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையின் பெரும் திருத்த வேலைகளுக்காக ஒரு லட்சம் ரூபா நிதி ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஒதுக்கப்பட்டுள்ளது என மேற்படி பாடசாலை அதிபர் திரு. இ. வல்லிபுரம் தெரிவித்துள்ளார். (இ-90)

### புதிய சாரணர் ஆணையாளர்

கொக்குவில், மே. 23

யாழ். மாவட்டத்தின் புதிய சாரணர் ஆணையாளராக திரு. ஆ. சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்பு இப்பதவியில் கடமை ஆற்றிய திரு. செல்லத்துரை வரதலிங்கம் அண்மையில் விபத்து ஒன்றில் மரணமானதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 12 ஆண்டுகளாக உதவி மாவட்ட ஆணையாளராகக் கடமையாற்றும் இவர் 60 ஆண்டு கால சாரணர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-69)

### மண்டைதீவு வித்தியாலயத்தில்

மண்டைதீவு மே 23

மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பெற்றோர் தினக்கூட்டம் வித்தியாலய அதிபர் திரு. வ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற விருக்கின்றது. (இ-88)

### பொதுக்கூட்டம்

கரவெட்டி மே 23

வடக்கு-கிழக்கு மாகாண விவசாயப் போதனாசிரியர்கள் தொழிற்சங்கப் பொதுக் கூட்டம் இம்மாதம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணிக்கு வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறும். (இ-70)

### கற்கி ஜெயந்தி விழா

அளவெட்டி தெற்கு ஸ்ரீ நாகவரத நாராயண தேவஸ்தானத்தில் இம்மாதம்26 ஆம் திகதி சனிக்கிழமை கற்கி ஜெயந்தி விழா ஆயிரத்து எட்டு சங்காபிஷேகத்துடன் நடைபெற இருக்கிறது. (க-51)

### கொடியேற்றம்

தம்பலகாமம் மே 23

திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமாரசாமி ஆலயக் கொடியேற்ற விழா 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். ஜூன் 5 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ-155)

### நாணய மாற்று விகிதம்


21-05-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 230.14 | 231.10 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.10 | 4002.50 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6749.11 | 6789.62 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2410.03 | 2439.89 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | 710.84 | 726.95 |
| 100 | ஜப்பானிய யென் | 25.9139 | 26.2655 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



திரு.

**பெரியதம்பி பரராஜசேகரன் J. P**

(மரணவிசாரணை அதிகாரி, கிளிநொச்சி)

**அன்னையின் மடியில்:-** 16 - 12 - 1944
**அரக்கரின் பிடியில்:-** 23- 05- 1989

மருதம் நிறைந்து செந்நெல் விளையும்
கிளிநகர் தன்னில் சமாதானப் புறாவாய்
சிறகடித்து பறந்து சேவைகள் செய்தாய்
குடும்ப விளக்காய் எமக்கொளி காட்டினாய்
கொடியவர் உம்மை நொடியினில் மறைத்தார்
உலகினில் உம்மை மறைத்தாலும்
இதை உறவினில் என்றும் வாழ்ந்திட

பிரார்த்திக்கும் :

தாய், மனைவி, மகள், பெறாமக்கள்.
மருமக்கள், சகோதர, சகோதரிகள், உறவினர்,

33, கனகபுரம்,
கிளிநொச்சி.

(3579)

## கண்ணீர் அஞ்சலி



**ப. காந்தன்**

தோற்றம்: 29 – 05 – 1965
மறைவு: 10 – 06 – 1987

காற்றினும் வேகமாய் கடந்ததே மூன்றாண்டு
நேற்று நடந்ததுபோல் நினைவில் நீ பசுமையாய்
நிறைந்தே இருக்கின்றாய் நேச மகனே காந்தன்!
மாற்றம் ஏதுமின்றி மனதில் சிரிக்கின்றாய்
மாற்று மருந்தேதும் இல்லையடா துயர் போக்க
மறக்கும் வழிகூடத் தெரியவில்லை இங்கெமக்கு
போற்றும் உன் வதனப் புன்னகையும் குறும்புகளும்
வாட்டும் எம்மனதில் எந்நாளும் நின்றுகொண்டு
கேட்டும் கேளாமல் நீ எங்கோ போய்விட்டாய்
பாட்டும் படமும்தான் மிச்சமோ எங்களுக்கு?

பிரிவால் துயருறும்:

அம்மா, சகோதரிகள், சகோதரன்.

ப. பரஞ்சோதி,
''திருத்தணிகை''
ஆனைக்கோட்டை.

[13236]

# "திருப்பம்" சிறுகதைத் தொகுதி எழுத்தாளருக்கு ஒரு திருப்பு முனை

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பாராட்டு

யாழ்ப்பாணம், மே 23
எழுத்தில் மட்டுமன்றி வாழ்விலும் ஒரு சமூக சேவையாளனாகத் திகழும் ஜோசப் பாலாவின் 'திருப்பம்' என்னும் சிறுகதைத் தொகுதி, நமது எழுத்தாளர்களுக்கு ஒரு திருப்பு முனையாக அமையும் என்று எதிர்பார்க்கின்றேன்.

யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற ''திருப்பம்'' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில், யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கு. டிவகலாலா இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

மேலும் அவர் தமது வெளியீட்டுரையில், சமுதாயத்தில் மலிந்துகிடக்கிற கொடுமைகள், ஏற்றத்தாழ்வுகள் ஆகியன சித்திரிக்கப்பட்டு, அவற்றுக்கான தீர்வுகளும் முன்வைக்கப்படுவதே ஒரு சமுதாயத்தின் உண்மையான இலட்சியமாகும். அந்த வகையில் ஜோசப்பாலாவின் சிறுகதைகள் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளன'' என்றார்,

விழாவுக்கு கவிஞர் ஜெயம் தலைமை வகித்தார்.

அருட் திரு கில்லறி ஜெபநேசன் அடிகளார், தமது ஆசியுரையில், சமுதாய மாற்றத்துக்கு இலக்கியம் பெரும் பங்களிக்கின்றது. இலக்கியம், மக்களைச் சரியான திசையில் வழிநடத்த உணர்ச்சி ஊட்டக் கூடியதாய்ப் படைக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

எழுத்தாளர் செங்கை ஆழியான் தமது உரையில், எழுத்தும் வாழ்வும் சம நிலைத் தன்மை கொண்டு, இரக்கத்தோடும் கூர்ந்தமதியோடும் பிரச்சனைகளை ஜோசப்பாலா அணுகும் முறை பாராட்டத்தக்கது என்றார்.

அருட் திரு சவரிமுத்து அடிகளார், தமது கருத்துரையில், இலக்கியம் சமயத்துக்கு அப்பாற்பட்டது. அவற்றுக்கு உரிமைகோரித் தமதாக்கிக் கொள்ள எவருக்கும் அதிகாரமில்லை என்று கூறினார். யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் தமது உரையில், சமுதாய முன்னேற்றத்துக்கெனப் படைக்கப்படும் ஆக்கங்கள், பரவலாகச் சென்றடையாவிட்டால், அவை சிறு வட்டத்துக்குள்ளேயே அடங்கி விடும் என்றார்,

நூலாசிரியர் ஜோசப்பாலா அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

(இ-க)

## முதலாண்டு நினைவஞ்சலி



(வீரவேங்கை 2ஆவது லெப். கருணாகரன்)

**நாகலிங்கம் கருணானந்தன்**

தாயின் மடியில்: 13 – 12 – 1969
தாயகத்தின் மண்ணில்: 05 – 06 – 1989

மீண்டும் வந்துதான் சேராயோ!
வரணியில் களப்பலியான வேங்கையே!
இளமை வாழ்வின் இனிமை துறந்து
தாயக மண்ணின் தளை யறுத்து
விடுதலை பெற்றிட விரைந்த கருணாவே!
உன் பயணம் தமிழுக்காய் தொடர
தங்கத் தமிழீழம் மலரட்டும்

**திதி: 26 — 05 — 1990**

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம். மற்றும் சக வீரர்களுக்கும் எமது அஞ்சலி
''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணா,
சின்னண்ணா, அக்கா.

அச்செழு வடக்கு,
நீர்வேலி.

[3589]


# நீங்களும் பஜாஜ் ஒன்றை வாங்கலாம்.




விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய நவீன காலத்திற்கு உகந்த வாகனம்......பஜாஜ். நீங்களும் இந்த அற்புதமான பஜாஜ் வாகனம் ஒன்றைச் சொந்தமாக வாங்கி மாதாமாதம் நல்ல இலாபம் சம்பாதிக்க இதுவே சிறந்த வாய்ப்பு.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனமும் வங்கிச் சேவையும் இணைந்து வகுத்திருக்கும் சுயதொழில் வாய்ப்பு ஆதாரத் திட்டத்தின் கீழ் பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்குங்கள். சாரதி அனுமதிப் பத்திரம் கொண்டுள்ள 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பஜாஜ் வாகனத்தின் விலையில் 60 சதவீதம் கடனாக வழங்கப்படும்.

எனவே, குறைந்தபட்சம் உங்களுக்கு ரூ 35,000 செலவிட முடியுமானால் புத்தம் புதிய பஜாஜ் வாகனம் ஒன்றை உரிமையாக்கிக் கொள்ள முடியும். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 4 வருடகால அவகாசம் வழங்கப்படும்

பஜாஜ் வாகனம் உங்கள் தொழிலுக்கு மட்டுமல்ல உங்கள் குடும்பத்தினரின் தனிப்பட்ட பயணங்களுக்கும் உகந்தது.
சந்தை...பாடசாலை... கோவில்... உறவினர் இல்லம் ...இப்படி எங்கு வேண்டுமானாலும் பஜாஜில் உல்லாசமாகச் சவாரி செய்யலாம்.

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பஜாஜ் ஒன்றை வாங்குங்கள். நிச்சயமாக நீங்கள் நன்மையடைவீர்கள்.

**றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்டெட்**
60, ஹைட்பார்க் கோர்னர்
கொழும்பு 2
தொலைபேசி: 25701/2, 422149, 549480



இப்பொழுது!
ஒரே தடவையில்
முழுப் பணத்தையும்
செலுத்தி பஜாஜ்
வாகனத்தை
உடனடியாகவே
பெறலாம்.

**பஜாஜ் பயணம் கோடி பெறும்**


## செயலாளருக்கு பாராட்டு விழா

பட்டிருப்பு மே 23
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்டக் கிளை வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி கலாசார அமைச்சின் செயலாளர் பதவி ஏற்றுள்ள திரு. ஈ. ஜே. சற்குணராஜாவை கௌரவித்துப் பாராட்ட உள்ளது. இது சம்பந்தமான விழா நாளை மட்டக்களப்பு ஆனைப்பந்தி இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். மட்டக்களப்பு, திருமலை, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில்கல்விப்பணிப்பாளர்களும், கோட்டக்கல்வி அதிகாரிகளும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-112)

## மாதிரி விவசாயக் கிராமம்

பட்டிருப்பு, மே 23
பட்டிருப்பு - தேர்தல் தொகுதியின் மேற்குப்புறப் பகுதியான 35 ஆம், 37 ஆம் குடியேற்றக் கிராமங்கள் மாதிரி விவசாயக் கிராமமாக வடிவமைக்கப்படும். இவ்விரு கிராமங்களையும் இணைத்த இருநூற்று ஐம்பது ஏக்கரிலான திருந்திய விதைநெல் உற்பத்திப் பண்ணையொன்றும் இங்கு உருவாக்கப்படும் என்று மட்டக்களப்பு - சர்வதேச கெகர் நிறுவன இணைப்பதிகாரி தெரிவித்தார். (க - 121)

## கமநலசேவை பாதிப்பு

கொழும்புத்துறை மே 23
யாழ். மாவட்டத்தில் அனேக பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களும், விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்களும்அண்மையில்கிராமசேவையாளர்களாகப்பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளதால்கமநல சேவைகள் திணைக்களத்தின் வேலைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன என அறிய வருகின்றது. [இ-30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சாயிராம்

# பொன்னான ஆண்டு 1989-1990

## (EPOCH - MAKING ANNOUNCEMENT OF INCARNATION)

## ஸ்ரீ சத்திய சாயி அவதாரம்

1940 ஆம் ஆண்டு மே திங்கள் 23ஆம் நாள் புட்டபர்த்திக் கிராமத்துக்கு வந்த எல்லோருடைய நீட்டிய கரங்களிலும் பரிசில்களை அளித்து தான் "சாயி பாபா" என்னும் மனுக்குலத்தை துன்பத்திலிருந்து மீட்க மீண்டும் வந்திருப்பதாகவும் அறிவித்தார். அவர்கள் ஆத்மீக பயிற்சியில் முதல் கட்டமாக தன்னை வியாழக்கிழமை தோறும் வணங்குமாறு பணித்தார்.

### பிரகடனம் (DECLARATION)

சரித்திரப் பிரசித்தி பெற்ற நாள்! 1940 ஆம் ஆண்டு ஒக்டோபர் திங்கள் 20ஆம் நாளன்று சத்திய நாராயணன் வழக்கத்துக்கு முன்பாக பாடசாலையில் இருந்து திரும்பி தனது சகோதரரின் வீட்டு வாசலுக்கு வெளியே புஸ்தகங்களை வீசி எறிந்தார். என்ன சலசலப்பு என அறிய அவரது அண்ணி வெளியே வந்தபோது "நான் உங்களைச் சேர்ந்தவனல்லன். நான் போகிறேன். நான் செய்ய வேண்டிய வேலை இருக்கிறது," என்று சத்தியா சொல்வதைக் கேட்டு திகைத்தார். பின் வீதி வழியே நடந்தார். "எனது பக்தர்கள் என்னை அழைக்கின்றார்கள். எந்தக் கடமைக்காக வந்தேனோ அது பூரணமாக வில்லை. நான் இப்பொழுது ஆரம்பிக்கின்றேன்," என்று சொல்லிக் கொண்டே அயல் வீட்டுத் தோட்டத்துக்குள் சென்றார். தனது தமையனாரை நோக்கி "மாயை நீங்கி விட்டது. நான் இனிமேல் உங்களுடையவனல்லன். நான் இனிமேல் உங்களுடையவனல்லன். நான் சாயி பாபா" எனக் கூறினார்.


மக்கள் மலர்களுடன் வந்தார்கள் சத்தியா போதித்த முதல் பஜன்:

"மானச பஜரே குரு சரணம் துஸ்தர பவ சாகர தரணம்"

## தெய்வீக சன்மார்க்க மதோத்தாரம் SPIRITUAL AWAKENING

"Let the Different faiths exist, let them Flourish, let the Glory be Sung in all the languages, in a Variety of Tunes, that should be the ideal. Respect the differences between the Faiths and Recognise them as valid as far as they do not extinguish the flame of Unity"

— Baba —




**The Savior Assures**

Cultivate a nearness with me in the heart and it will be rewarded then you too will acquire a fraction of that supreme love. Be confident that you will all be liberated. Know that you are saved. Many hesitate to think that things will improve, that life will be happy for all and full of joy, and that the golden age will recur. Let me assure you that this Dharma Swarupa, that this Divine Body, has not come in vain. It will succeed in averting the crisis that has come upon humanity.

— Baba —

SAI DEEPAM
சாயி தீபம்
POINTPEDRO ROAD NELLIYADY.
KARAVEDDY
SRILANKA

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அருட்போதனைகளில் உள்ள சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆகிய சிலங்களை 'சுய'; 'குடும்ப', 'சமூக' சாதனைகள் (ஆத்மீக பயிற்சி) மூலம் நெறிப்படுத்த, நீர்ப்பானையைச் சுற்றி உள்ள 'ஈரத்துணி' நீரைச் சமமாக, தூய்மையாக, குளிர்மையாக வைத்திருப்பது போல், ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனங்கள், ஒருவரின் சாதனையைப் பேணவும் விருத்தி செய்யவும் உதவுகின்றன.

பொன் ஆண்டைக் கொண்டாடும் இவ்வேளையில் எல்லோரும் இன்புற்றிருக்கவும், எம்மைத் தொடர்ந்தும் வழி நடத்தவும் அருள் ஆசி வேண்டி இச்சிறப்பு மலரை சாயி மாதாவின் திருப்பாத கமலங்களில் அர்ச்சித்து, சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்.

"லோகாஸ் சமஸ்தாஸ் சுகினோ பவந்து"

# சாயி தீபம்

நெல்லியடி, கரவெட்டி.
இலங்கை (ஸ்ரீலங்கா)
மே 23-1990

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரபு - இஸ்ரவேல் மோதல் ஜோர்தானுக்கும் பரவியது!

ஜெருசலம், மே 22

டெல்அவிவ் அருகில் இனந் தெரியாத நபர் ஒருவரினால் எட்டு பலஸ்தீனியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஆரம்பமான வன்செயல்கள் நேற்று ஜோர்தான் பிரதேசத்திற்கும் பரவியது.

காஸா மற்றும் நசரேத் ஆகிய பகுதிகளிலும் வன்செயல்கள் இடம் பெற்றன.

இதே வேளை —

இஸ்ரவேலை அமெரிக்க அரசு நேற்று கண்டனம் செய்தது.

பலஸ்தீனியர் மீதான தாக்குதல்களை நிறுத்துமாறு இஸ்ரவேல் அரசை, அமெரிக்கா கோரியுள்ளது. (எ)

## சீனாவுடன் ராஜதந்திர உறவு ஏற்படுத்த தைவான் விருப்பம்

தைப்பே, மே 22

சீனாவுடன் வர்த்தக, கலாசார உறவுகளை வளர்க்க விரும்புவதாக தைவானின் புதிய ஜனாதிபதி நேற்றுத் தெரிவித்தார்.

40 ஆண்டு காலத்தின் பின்னர் சீனாவுடன் தைவான் நேரடித் தொடர்பு வைத்துக் கொள்ள முயற்சிப்பது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இரு நாடுகளுக்கும் இடையே யுத்த நிலைமையை நீடிக்கத் தான் விரும்பவில்லை என்றும் தைவானின் புதிய ஜனாதிபதி அறிவித்தார்.

தைவானில் ஜனநாயக சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

## எகிப்து அதிபருக்கு சிங் செய்தி பெர்னாண்டஸ் மூலம் அனுப்புதல்

புதுடில்லி மே 22

எகிப்து தலைநகர் கெய்ரோவில் நடைபெறும் சோஷலிச மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக இந்திய மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நேற்று கெய்ரோ புறப்பட்டார்.

எகிப்து அதிபர் ஹோஸ்னி முபாரக்குக்கு பிரதமர் வி. பி. சிங்கிடம் இருந்து விசேட செய்தி ஒன்றை திரு பெர்னாண்டஸ் எடுத்துச் செல்கிறார்.

காஷ்மீர் விவகாரத்தைக் கவனிக்கும் தனி அமைச்சராகவும் திரு. பெர்னாண்டஸ் பணிபுரிந்து வருகிறார். (எ)

## சிங் அரசுக்கு தலையிடியான ஹரியானா மாநில நெருக்கடி

புதுடில்லி மே 22

ஹரியானா மாநிலத்தில் உள்ள மேஹம் சட்டசபைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சுயேச்சை வேட்பாளர் ஒருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே தேர்தல் ஆணைக்குழு இம்மாதம் 26ம் திகதி நடைபெற நிர்ணயிக்கப்பட்டிருந்த இத்தேர்தலை ஒத்தி வைத்தது.

மேஹம் தொகுதியில் ஹரியானாவின் தற்போதைய முதல்வரான ஓம்பிரகாஷ் சௌதாலா போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தார்.

துணைப் பிரதமர் தேவிலாலின் புதல்வர் சௌதாலா ஆவார்.

கடந்த பெப்ரவரியில் மேஹம் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்த திகதி நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

அப்போது அத்தொகுதியில் வன்செயல்கள் வெடித்ததைத் தொடர்ந்து தான் இம்மாதம் 26ஆம் திகதிக்கு இத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையில் ஹரியானாவில் ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வரும்படி இந்திரா காங்கிரஸ் கோரியிருக்கிறது.

மேஹம் தொகுதிப் பிரச்சினையால் எழுந்துள்ள அரசியல்நெருக்கடி பற்றி இந்திய மத்திய அமைச்சரவை நேற்றுக் கூடி விவாதித்தது. (எ)

## தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்

தமிழில் பாண்டித்தியமும், தமிழ்ச் சுருக்கெழுத்தில் தேர்ச்சியும், நிறைந்த அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

மூன்று வருடங்களுக்குக் குறையாத சுருக்கெழுத்து தட்டெழுத்து அனுபவமும், நிமிடத்துக்கு 80 சொற்களுக்கு மேல் கையாளக்கூடிய திறமையும் உள்ளவர்களுக்கே முன்னுரிமை தரப்படும். கடிதங்களை சுயமாக வடிவமைப்பதில் அனுபவம் இருந்தால் மேலதிக தகுதியாகக் கணிக்கப்படும்.

ஆங்கில சுருக்கெழுத்து / தட்டெழுத்து தெரிந்தால் விசேட தகமையாகக் கருதப்படும்.

பூரண சுய விவரங்களைத் தெரிவித்து 30-5-1990 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**ஆளணி முகாமையாளர்,**
**நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிரைவேட்] லிமிட்.**
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## WANTED

Wanted a Private Secretary with a thorough knowledge in English. Should be able to attend correspondence independently. Should be proficient in English short-hand and typing. Applicants should be over 35 years.

Salary negotible but not less than Rs. 2,000/-

Please apply with copies of certificates of Educational qualifications, experience and character before 28-5-1990.

**Personnel Manager,**
**New Uthayan Publications (Pvt) Ltd.,**
**292/2, Navalar Road, Jaffna.**

★ இந்திய பாதுகாப்புப்படை சுட்டு

# காஷ்மீரில் நாற்பது பேர் மரணம்; ஊரடங்குச்சட்டம் மீறப்பட்டது!

ஸ்ரீநகர் மே 22

காஷ்மீரின் முக்கிய மதத் தலைவர் ஒருவர் நேற்று முன்தினம் முகமூடி அணிந்த நபர்கள் சிலரால் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஸ்ரீநகரில் கால வரையறையற்ற ஊரடங்குச் சட்டம் மீண்டும் கொண்டு வரப்பட்டது.

பிரபல முஸ்லிம் மதத் தலைவரும் காஷ்மீர் மக்கள் நடவடிக்கைக் குழுத் தலைவருமான உவைஸ் முலவிக் பாரூக் என்பவர் அவரின் வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து, ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

ஆனால் ஆயிரக் கணக்கானோர் திங்கட்கிழமை இரவு ஸ்ரீநகரில் ஊரடங்குச் சட்டத்தை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அந்த ஊர்வலத்தைக் கலைக்க பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதில் 40க்கு அதிகமானோர் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் காயமடைந்தனர் என்று அரசாங்க அதிகாரிகள் சொன்னார்கள்.

இதனிடையில் -

### புஷ்ஷுக்கு வேண்டுகோள்

வாஷிங்டன், மே22

ஹங்கேரியில்சோவியத்துருப்புக்களை முற்றாக விலக்கிக் கொள்ளத் தேவையான நிர்ப்பந்தங்களை அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவுக்கு கொடுக்கும்படி ஹங்கேரி பதில் ஜனாதிபதி அர்பாட் கொன்ஸ் ஜனாதிபதி புஷ்ஷைக் கேட்டுள்ளார். (எ)

### ரூமேனியா தேர்தலில் மோசடி;

ரூமேனியாவில் கடந்த ஞாயிறு நடந்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் மோசடி இடம் பெற்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு உள்ளது.

பிரதான எதிர்க் கட்சி இக்குற்றச் சாட்டைச் சுமத்தியது.

கடந்த ஞாயிறு நடந்த தேர்தல்களின் முடிவுகள் வெளியாகி விட்டன.

தேசிய மீட்பு முன்னணியின் ஆதரவில் போட்டியிட்ட பதில் ஜனாதிபதி எலிஹுஸ்கி 83 சத வீத வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்டது.

506 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றத்தில் தேசிய மீட்பு முன்னணிக்கு 3 இல் 2 பங்கு பெரும்பான்மை கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ)

### பெருவில் தேர்தல்

லிமா, மே 22

பெரு நாட்டின் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி நடைபெற உள்ளது.

தேர்தலுக்கு மூன்று வாரம் இருக்கக்கூடியதாக பெரு தலைநகர் லிமாவில் ஆசிரியர்கள் சுரங்கத் தொழிலாளர்கள் அரசு ஊழியர்கள் பஸ் ஊழியர்கள் ஆகியவர்கள் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பெருவில் பணவீக்கம் 40 சதவீதமாக உள்ளது. தொழிற்சங்கங்களின் சக்தியைக் காட்டவேஇந்தவேலை நிறுத்தம் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக தொழிற்சங்கத் தலைவர்கள் கூறுகின்றனர்.

## பாகிஸ்தானுடன் பேச இந்தியா மீண்டும் நிபந்தனை

பாகிஸ்தானுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு இந்தியப் பிரதமர் வி. பி. சிங். நிபந்தனை விதித்திருக்கிறார்.

நேற்று சந்தித்த அமெரிக்க அதிபர் புஷ்ஷின் சிறப்புப் பிரதிநிதியிடம் திரு. சிங் பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு ஆயுதம் மற்றும் உதவிகளை வழங்குவதை நிறுத்தி விட்டால் பாகிஸ்தான் அரசுடன் பேச இந்தியா தயாராக இருப்பதாக தெரிவித்தார். (எ)

## பர்மாவில் மனித உரிமை மீறல் அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்டன், மே 22

பர்மா நாட்டில் மனித உரிமை மீறல்கள் அதிக அளவில் இடம்பெறுவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி உள்ளது.

அமெரிக்கக் காங்கிரஸில் செனட்டர் ஸ்டீபன் சோலார்ஸ் சமர்ப்பித்த அறிக்கை ஒன்றில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதைவஸ்து கடத்தலுக்கு பர்மாவில் அதிகாரத்தில் உள்ளவர்கள் ஊக்கம் அளித்து வருவதாகவும் செனட்டர் சோலார்ஸ் குற்றஞ் சாட்டினார். (எ)

★ காஷ்மீர் பிரச்சினை

## புஷ்ஷின் விசேட தூதர் புதுடில்லிக்கு விஜயம்!

அமெரிக்க ஜனாபதி புஷ்ஷின் சிறப்புத் தூதர் தலைமையிலான உயர் நிலைக்குழு திங்கள் புதுடில்லி சென்றடைந்தது.

காஷ்மீர் தகராறு தொடர்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சமரசம் செய்வதற்காக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரு நாடுகளும் எல்லைப் புறத்தில் இருந்து தங்கள் படைகளை விலக்கி பதற்றத்தைத் தணிக்க முன்வர வேண்டும் என்று அமெரிக்கக்குழு வற்புறுத்தி வருகிறது. (எ)

## சோவியத் கடிகாரங்கள் ஜப்பானில் விற்பனை!

டோக்கியோ, மே 22

1989 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து 'வஸ்தோக்' எனப்படும் ருஷ்யக் கைக்கடிகாரங்கள் ஜப்பானியச் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன.

டோக்கியோவில் மாத்திரம் 8,000 கைக்கடிகாரங்கள் இது வரைக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இளம் சந்ததியினரே கூடுதலாக இந்தக் கைக்கடிகாரங்களை வாங்குவதாக தெரிகிறது. (எ)

★ கொலம்பியாவில்

## குண்டு வெடிப்புக்களிடையே ஜனாதிபதி தேர்தல் பிரசாரம்

பொகொடா, மே 22

கொலம்பியா ஜனாதிபதித் தேர்தல் இம் மாதம் 27 ஆம் திகதி நடைபெறும்.

நாட்டின் போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான எதிர்காலக் கொள்கையை நிர்ணயிக்கும் தேர்தலாக இது அமையும்.

தற்போது ஜனாதிபதியாக இருக்கும் வேர்ஜிலியோ பார்க்கோ போதைப்பொருள் உற்பத்தி, கடத்தலுக்கு எதிராக தீவிரமான போக்கைக் கடைப்பிடித்து வருகிறார்.

இவர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவில்லை. ஆனால் இவரின் ஆளும் லிபரல் கட்சியின் சார்பில் செளஸர் கவிரா போட்டியிடுகிறார்.

போதைக் கடத்தல்காரர்களுக்கு எதிரான யுத்தம் தாம் பதவிக்கு வந்தாலும் தொடரும் என்று திரு. கவிரா கூறியிருக்கிறார்.

ஆனால் இவரை எதிர்த்துப் போட்டியிடும் வேட்பாளர்கள் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் போதைக் கடத்தலை ஒழிக்க மாற்று வழிகளைக் கையாளப் போவதாகக் கூறியிருக்கின்றனர்.

இதன் காரணமாக ஆளும் கட்சி வேட்பாளருக்கு வாக்களிப்போரைப் பயமுறுத்த போதைவஸ்து முதலாளிகள் குண்டுகளை வெடிக்க வைக்கும் இயக்கம் ஒன்றை நடத்தி வருகின்றனர்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட நியமனப் பத்திரங்கள் தக்கல் செய்த மூன்று வேட்பாளர்கள் போதைவஸ்து கடத்தல்காரர்களால் கொல்லப்பட்டு விட்டனர்.

இதனால் போட்டியிடும் ஏனைய வேட்பாளர்கள் டெலிவிஷன் மூலமே பிரசாரங்களை நடத்தி வருகின்றனர். (எ)


குமுலுஸ் D.F. போட்டி


**BASF**
**குமுலுஸ் D.F.**
**பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்**

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து. பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் "குமுலுஸ் DF போட்டி" என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஸ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பேஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.




பெயர் ____
முகவரி ____
____
வியாபாரியின் பெயர் ____
____
முகவரி ____
____

FINCHEM AGRO DIVISION
**பின்லெ கெமிக்கள்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்**
(விவசாய இரசாயன பகுதி)
186, வக்சோல் வீதி, கொழும்பு 2.

Licence No S/731

பீடை நாசினிகள் அபாயகரமானவை. **அவதானமாக பாவிக்கவும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரிஸ்ஸா முகாமில் அகதிகள் அனைவரும் மிருகங்களைப் போலவே நடத்தப்பட்டோம்!

## தப்பிவந்தவர் தகவல்

வடக்கு — கிழக்கிலிருந்து இந்திய இராணுவத்துடன் தப்பி ஓடி, ஒரிஸா அகதி முகாமில் கஷ்டங்களை அனுபவித்து அங்கிருந்து தப்பி மட்டக்களப்புக்கு வந்த இராஜரட்ணம் சதாசிவம் பற்றிய செய்தி ஒன்று நேற்றைய உதயனில் வெளியாகிஇருந்ததல்லவா?

அவர் மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் "கொண்டல்" என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியை இங்கு மறுபிரசுரம் செய்கிறோம்.

திரு. இராஜரட்ணம் சதாசிவம் (34 வயது) ஈ.என்.டி.எல், எவ்வுடன் இணைந்து செயற்பட்டவர். அவர் அளித்த பேட்டி விவரம் வருமாறு:-

மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களை விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த பின் கடந்த பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதி திருமலைக்குத் தப்பிச் சென்றேன். அங்கிருந்து மார்ச் மாதம் 7 ஆம் திகதி "திப்பு சுல்தான்" கப்பலில் ஒரிஸா புறப்பட்டோருடன் நானும் சென்றிருந்தேன்.

அன்றையதினம் இரு கப்பல்கள் புறப்பட்டன. ஒன்றில் ஈ. பி. ஆர். எல். எவ்வைச் சேர்ந்த ஆயிரத்து இருநூறு பேர் சென்றனர். நாங்கள் சென்ற கப்பலில் எழுநூற்று எழுபத்தாறு பேர் இருந்தனர். இதில் காளிதாஸ் விஜி பாபுஜி ஆகியோரும் பயணம் செய்தனர்.

பத்தாம் திகதி காலைஆறு மணிக்கு விசாகபட்டினத்தில் கொண்டுபோய் இறக்கப்பட்டோம். காலைத் தேநீர் தரப்பட்டது. பின்னர் பஸ்களில் இருபத்தைந்து பேர்களாக ஏற்றப்பட்டு ஒரிஸாவில் உள்ள மல்கன் கிரிஎன்ற இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு பள்ளிக்கூடம் ஒன்றில் தங்கினோம்.

பொலீஸார் காவல் செய்தனர். அங்குள்ள ஸ்தாபனம் ஒன்று எமக்கு உணவு வழங்கியது. காலையில் உப்பு மா வழங்கப்பட்டது. மதிய உணவாகவும் இராச் சாப்பாடாகவும் சோறு. கறி. உப்பு என்பன சேர்ந்த ஒரு துவையல் கிடைத்தது. தேநீர் கிடைப்பதில்லை. ஆனால் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது.

பாடசாலை இயங்க வேண்டுமென்றபடியால் அங்கிருந்த நாங்கள் ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மற்றொரு கட்டிடத்துக்கு ஏழு நாட்களின் பின் இடமாற்றப்பட்டோம்.

### 110 ரூபா தரப்பட்டது

அப்புதிய முகாமில் வைத்து ஒவ்வொருவருக்கும் நூற்றுப் பத்து ரூபா வழங்கப்பட்டது. படம் எடுக்கப்பட்டது. அகதிகள் என்று குறிப்பிட்ட மஞ்சள் நிற அடையாள அட்டையும் விநியோகிக்கப்பட்டது.

அம் முகாமைச் சுற்றியும் பொலீஸ் காவல் இருந்தது. உணவு வழங்கும் ஸ்தாபனப் பிரதிநிதிகள் இருந்தனர். தம்பதிகளுக்குத் தனியறை வழங்கப்பட்டது. எல்லோரையும் மேற்பார்வை செய்ய எம்மிடையே உள்ள ஒருவர் தெரிவு செய்யப்பட்டார்.

வெளிக் கதவு காலை ஆறு மணிக்கு திறந்து மாலை ஏழு மணிக்கு மூடப்படும். இரவில்வெளியே செல்லமுடியாது அவ்வூரைப் பார்க்க ஆசை வந்தாலும் எமக்கு மொழி புரியாததால் பேசி விடயத்தை அறிய முடியாது. அகதிகளாகிவிட்ட எங்களை அப்பகுதி மக்கள் கூடி வந்து "புதினப் பொருளைப்" பார்ப்பதுபோல் பார்ப்பார்கள். இதுவரை கேள்விப்படாத மொழியாக அது இருந்தது. ஒரிஸா மிகவும் சூடான பிரதேசம் ஆகும். முகாமில் குளிப்பதற்கு மூன்று குழாய்க் கிணறுகள் சரிசெய்து தரப்பட்டது. அருகாமையில் ஓடிக்கொண்டிருந்த வாய்க்கால் தண்ணீரையும் நாங்கள் உபயோகித்தோம்.

ஈ. என். டி. எல். எப். பைச் சேர்ந்த இராஜன் என்பவர் முகாமுக்கு அடிக்கடி வந்து இயக்க வாலிபர்களைச் சந்தித்துப் பேசுவார். மீண்டும் எல்லோரும் தத்தம் பகுதிகளுக்குச் சென்று சண்டை செய்யவேண்டும் என்றும் அதற்காக எப்போதும் தயாராய் இருக்கும்படியும் அவர் கூறுவார்.

### பலரும் கரிசனை காட்டவில்லை

எஃினும் பொதுவாக இக் கோரிக்கைக்குப் பெண்களிடத்தில் வரவேற்பைக் காண முடியவில்லை. வாலிபர்களும் இதில் கரிசனை குறைந்தவர்களாகவே இருந்தனர். இனியும் வாழ்க்கையை நாசமாக்கிக்கொள்ள முனையவில்லை என்பது முகாமில் இருந்தோர் மூலம் தெரிய வந்தது.

அகதிகளாக யாரும் கவனிக்கப்படவில்லை. எல்லோரும் மிருகங்களைப் போலவே நடத்தப்பட்டோம். இதனால் ஒரு தடவை மூன்று வாலிபர்கள் வெளியேறிப் பிடிட்படனர், இவர்களுக்கு முகாம் பொறுப்பாளர் தண்டனை வழங்கினார். இன்னொருதடவைவேறு இரண்டு பேர் முகாமிலிருந்து வெளியேறி பஸ்ஸில் பயணம் செய்யும் பொழுது பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களும் முகாமில் வைத்துத் தண்டிக்கப்பட்டனர்.

எம்மோடிருந்தவர் அங்கிருந்த பெண்ணை நெருங்க முற்பட்ட பொழுது பிடிபட்டுத் தண்டிக்கப்பட்டார். இத்தகைய சம்பவங்கள் நாம் சென்ற சில தினங்களிலேயே இடம்பெறத் தொடங்கின.

ஒருநாள் இரவு 6 மணியளவில் நானும் வெளியேறினேன். இதற்காக முன்னரே திட்டமிட்டபடி என் பையை அவ்வூரைச் சேர்ந்த ஒருவர் மூலமாக முகாமுக்கு வெளியே கொண்டு செல்லச் செய்தேன். பின்னர் பஸ்ஸில் ஏறி தூரம் சென்று இறங்கினேன். வாகனத்தில் சென்றால் சோதனை நிலையத்தில் மாட்டிக்கொள்ளக்கூடும் என்பதால், ஒருவரின் ஆலோசனையின் பேரில் பஸ்ஸிலிருந்து இறங்கி, அன்றிரவு முழுவதும் தனிமையில் நடந்து விடியற்காலை இன்னொரு பஸ் மூலம் மற்றொரு இடம் சென்றடைந்தேன்.

### "பிச்சையெடுத்தேன்!"

ஒரிஸ்ஸாவில் பல பகுதிகளிலும் அலைந்து ரயில் மார்க்கமாக மதுரைக்குச் செல்ல முடிந்தது. பின்னர் இராமேஸ்வரம் கரையை அடைந்தேன்.

ஒரிஸ்ஸாவிலிருந்து இராமேஸ்வரம் கரையை அடைவதற்கு, நடந்தும், வாகனத்திலுமாக ஏறக்குறைய 17 தினங்கள் எனக்குப் பிடித்தன. மொழி தெரியாமலும், கையில் பணமில்லாமலும் நான் பட்ட அவதி சொல்ல முடியாது. அப்போது தான் எண்ணினேன் ஏன் நாட்டுப் பற்றில்லாதவர்களுடன் சேர்ந்தியங்கினேன் என்று!

ஓர் இடத்தில் எனது மூக்குக் கண்ணாடியையும், மூன்று 'ரீ' சேட்டுக்களையும் விற்றுப் பணம் பெற்றேன். மற்றொரு சந்தர்ப்பதில் இரண்டு ரூபா பிச்சை எடுத்தேன். இன்னொரு இடத்தில் பசி தாங்கமுடியாது கடையில் கெஞ்சிக் கேட்டுக் கிடைத்ததை உண்டேன். நான் பீடும் தேவனை போதாதென்று திருச்செந்தூரில் வைத்து கைப் பையும் களவு போனது.

ஒரு சமயம் வீதியால் களைப்புடன் நடந்து கொண்டிருந்தேன். அப்போது வெள்ளிக் கொலுசு ஒன்று வீதியில் கிடந்து எடுத்தேன். இதனை விற்றுப் பணம் பெறலாம் என்று ஒருவரை நாடியபோது "திருடிய பொருள்" என மாட்ட முயற்சி செய்தான் அவன். எனது நிலையை மிகப் பணிவாகக் கூறி அதிலிருந்து ஒருவாறு தப்பிவிட்டேன்.

பின்னர் அதனை எழுபத்தைந்து ரூபாவுக்கு விற்று செலவுக்குப் பயன் படுத்தினேன். காணும் கோயில்களுக்கெல்லாம் சென்றேன். ஆண்டவனை மன்றாடினேன். "எனக்கு இந்த நிலை போதும்" என்று தான் இறைவனை வேண்டினேன்.

மதுரையை அடைந்த பிற்பாடு மட்டக்களப்பில் உள்ள என் மனைவிக்கு விவரங்களைக் குறிப்பிட்டுக் கடிதம் ஒன்றை எழுதினேன். என்னைக் கண்டுபிடித்துக் கொஞ்சம் பணம் கிடைக்கச் செய்யுங்கள் என்று கடிதத்தில் அழாக்குறையாகக் கேட்டிருந்தேன்.

இராமேஸ்வரத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் காணப்பட்டனர். அவர்களின் உதவியுடன் யாழ்ப்பாணம் வந்தடைந்தேன். அதில் ஒருவர் பணம் தந்தார். தலைமன்னாரிலிருந்து மட்டக்களப்பை ரயில் மூலம் கடந்த புதுவருடத்தினத்தன்று வந்தடைந்தேன். இவ்வாறு அவர் பேட்டியில்விபரித்தார்.

## கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

### நந்தாவில், கொக்குவில்

**அம்பாள் அடியார்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்**

அன்பர்களே;

எமது ஆலயத்தில் கடந்த இரு வருடங்களுக்குள் பல அசம்பாவிதங்கள் இடம் பெற்றதை யாவரும் அறிந்ததே முக்கியமாக; கோவில் பூசை நேரத்தில் அந்நியப்படைகளினால் மக்கள் துன்புறுத்தப்பட்டமையும், உதவிப் பூசகர் கண்ணன், திருவாளர்கள் புலேந்திரன் (A. G. A.), V. சண்முகம் அவர்களின் அகால மரணமும், பிரதம குருக்கள் அவரது இல்லத்தில் வைத்துத் தாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கவை.

அம்பாள் சிலை உடைத்து, மற்றும் பிள்ளையார், முருகன், வைரவர் போன்ற சிலைகளைப் பிரட்டியமையும், வேறு பல கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இக்கஷ்ட காலங்கள் என்பவற்றை எமது பரிபாலனசபை பொருட்படுத்தாது தமது கோவில் தொண்டுகளை அக்கறையுடன் செய்து வருகின்றது. உதாரணமாக, அம்பாள் சிலை உடைத்த இருபத்து நான்கு மணி நேரத்திற்துள் பாலஸ்தானம் செய்து நித்திய பூசை நடக்கிறது.

- ★ மடப்பள்ளி, கட்டிடப் பூச்சு வேலைகள், நில வேலைகள் போன்றவை பூர்த்தி செய்தல்,
- ★ அம்பாள் ஸ்தூபி, ஸ்ரீதளம், ஓர் அடியாரின் நிதியுதவியுடன் கட்டி அமைத்தல்,
- ★ புதிய வசந்த மண்டபம் ஓர் அடியாரின் நிதியுதவியுடன் கட்டியமைத்தல்,
- ★ மணி மண்டப வேலைகள் ஒப்பேற்றுதல்,
- ★ புதிய சண்டேஸ்வரி ஆலயம் ஒன்றை ஓர் அடியாரின் நிதியுதவியுடன் ஸ்தாபித்தல் ஆகியன நடந்து முடிந்துள்ளன.
- ★ பிள்ளையார், முருகன், வைரவர் போன்ற ஸ்தல திருத்த வேலைகளை முன் உபயஞ் செய்தவர்கள் தொடர்ந்து செய்வார்கள்.
- ★ எமது பிரதம குருக்கள் இந்தியா சென்று எம் குல தெய்வம் அம்பாளின் சிலையை சிறந்த முறையில் அடியார்களின் பண உதவியால் பூர்த்தி செய்து கொண்டு வந்துள்ளார்.
- ★ கோவில் மின்சாரத் தொடர்புகள் இன்னுமொரு அடியாரால் கோவில் முழுவதிலும் செய்யப்பட்டு ஒப்பேற்றப்படுகின்றது.
- ★ மஹா கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக பூர்த்தி

**செய்ய வேண்டிய கீழ்க்காணும் வேலைகள் உள்ளன.**

வசந்த மண்டபத்திற்கு முன்னால் வரும் கூரை, தூண் புதுப்பித்தல்; கோபுரவாசலிலிருந்து கொடித்தம்பம், ஸ்தாபன மண்டபம், வரையும் கூரை, தூண் புதுப்பித்தல், களஞ்சிய அறை, மூன்று வீதியிலிருக்கும் தூண்களின் பூச்சும், கோவில் பூராசவும் வெள்ளையடித்தல். பெயின்ற் அடித்தல் ஆக வேண்டியவற்றை ஒப்பேற்ற அடியார்கள் நிதி உதவ வேண்டும்.

தயவு செய்து முன்வந்து எமது பரிபாலனசபை தனாதிகாரி திரு. செ. சிவபாதத்திடம் பணத்தைக் கொடுத்து பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

மேற்காணும் வேலைகள் காரணமாக இவ்வாண்டு (1990) மஹோற்சவம் தடைப்பட்டுள்ளது. ஆனால் திருப்பணிவேலைகள் பூர்த்தி அடைந்ததும், மஹாகும்பாபிஷேகத்தோடு தொடர்ந்து (48 நாட்கள்) மண்டலாபிஷேகங்களும் நடைபெறும்.

இப்படிக்கு:

**நந்தாவில் மனோன்மணி அம்பாள் ஆலய,**
தர்மகர்த்தா, பரிபாலனசபை.

[13242]

23- 05- 1990

## கம்பியூட்டர் கல்வி

- ✶ **Diploma in Data Processing and Computer Programming in BASIC Language**
- ✶ ஆரம்பம்:- 25th May 90 (திங்கள், புதன், வெள்ளி)
  26th May 90 (சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.




**UNIKCO COMPUTER CENTRE**
No. 5, Power House Rd., 2nd Lane, Jaffna.

[சி-4554]

# சந்தை விலைகள்

சுன்னாகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி: | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 15 00-17.00 | ரூ. 12.00-16.00 | ரூ. 22.00-24.00 |
| வாழைக்காய் | ரூ. 8.00-10.00 | ரூ. 7.00- 8.00 | ரூ. 8.00-10.00 |
| பயிற்றங்காய் | ரூ. 12.00-14.00 | ரூ. 14.00-18.00 | ரூ. 18.00-20.00 |
| பாகற்காய் | ரூ. 15.00-17 00 | ரூ. 10.00-13 00 | ரூ. 18.00-20.00 |
| கோவா | ரூ. 11.00-13.00 | ரூ. 12.00-14 00 | ரூ. 16.00-18.00 |
| லீக்ஸ் | ரூ. 20.00-22 00 | ரூ. 22.00-24.00 | ரூ. 22.00-24.00 |
| கரட் (மலைநாடு) | ரூ. 18.00-20.00 | ரூ. 20.00-22.00 | ரூ. 22.00-24.00 |
| பீற்றூட் | ரூ. 8.00-10.00 | ரூ. 7.00-10.00 | ரூ. 14.00-16.00 |
| பீன்ஸ் | ரூ. — | ரூ. 20.00-22.00 | ரூ. 20.00-24.00 |
| பூசணி | ரூ. 5.00- 6 00 | ரூ. 3 50- 4.50 | ரூ. 5.00- 6.00 |
| பச்சைமிளகாய் | ரூ. 18.00-20.00 | ரூ. 13.00-14.00 | ரூ. 28.00-30.00 |
| வெங் (வேதாளம்) | ரூ. 45.00-52.00 | ரூ. 35.00-45.00 | ரூ. — |
| வெங்காயம் (சிறிய) | ரூ. 35.00-42 00 | ரூ. 28 00-35.60 | ரூ. 44.00-50.00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 30.00-32.00 | ரூ. 28.00-31.00 | ரூ. 32.00-34.00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 10 00-12.00 | ரூ. 9.00-11.00 | ரூ. 10.00-11.00 |
| வெண்டைக்காய் | ரூ. 18.00-20.00 | ரூ. 16.00-18.00 | ரூ. 18.00-20.00 |

## பாடசாலை - -

வேண்டும்.

★ அவர்கள் எழுதும் போது இவ்வெழுத்துகளைப் பிரயோகிக்க ஊக்குவிக்க வேண்டும்.

★ எனினும் பழைய எழுத்துக்களை எழுதுவோர் 3 ஆண்டுகளுக்குப் பாதிக்கப்படலாகாது. 3 ஆண்டுகளுக்குப் பின்னர் நிலைமை மறு சீராயப்படும்.

★ புதுப்பாட நூல்களிலும், மீள்பதிப்பு நூல்களிலும்சீராக்கம்பெற்ற 13 எழுத்துக்களும்பிரயோகிக்கப்படும்.

★ வினா விடைத்தாள்களிலும் இப் புதிய எழுத்துகளைப் பிரயோகித்தல் வேண்டும்.

✶ இவ்வெழுத்துச் சீராக்கம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது- (இ-உ)

## ஈ.பி.ஆர். - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லைப் புலிகள் உறவைப் பெரிதும் பாதிக்கும் என்பதைச் சுட்டிக் காட்டினோம்.

சர்வகட்சி மாநாட்டில் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட குழுக்கள், கட்சிகள் பங்குபற்றுகின்றன. சர்வ கட்சி மாநாட்டை ஒருபொது மேடையாக்கிப் பிரச்சினையைத் தீர்க்க முயல்வதை நாம் ஆட்சேபிக்கிறோம். அதனால் நாம் சர்வ கட்சி மாநாட்டை நிராகரிக்கிறோம் என்பதை அமைச்சருக்கு எடுத்துச்சொன்னோம்.

அவ்வாறான சர்வகட்சி மாநாட்டில் நாம் கலந்து கொள்வதால் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடக்கும் நேரடிப் பேச்சின் முக்கியத்துவம் குறைந்து விடும் எனவும் அமைச்சருக்கு விளக்கினோம் — என்றார். (அ-உ)

## இராணுவ நடவடிக்கை- - -

]1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இடமாற்றம்" மட்டுமே நடப்பதாக அவர் சொன்னார்.

இது வழக்கமான விடயம் என்றும்—

ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை ஓரிடத்தில் இருக்கும் துருப்புக்களை இன்னொரு இடத்துக்கு மாற்றுவதற்கு விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் பாவிக்கப்படுவது வழமை என்றும் — அமைச்சர் சொன்னார்.

உணவு மற்றும் பொதிகளை கடல், தரை மார்க்கமாக எடுத்துச் செல்வதில் இருக்கும் சிக்கல்கள் காரணமாக அவற்றை ஆகாய மார்க்கமாக எடுத்துச் செல்லவேண்டியிருப்பதாலும், விமானங்கள், ஹெலிக்கொப்டர்களை அடிக்கடி பாவிக்க வேண்டியிருப்பதாகவும் அவர் மேலும் சொன்னார்.

இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் தெரிவித்த ஆட்சேபனையை ஜனாதிபதிக்கு தாம் எடுத்துரைப்பதாகவும் அமைச்சர் சொன்னார்.

இந்த விடயங்கள் தொடர்பாக மேலதிக விவரங்களை விசாரித்து அடுத்த சந்திப்பின் போது தெளிவுபடுத்துவதாகவும் அமைச்சர் கூறினார்.

இராணுவ வண்டிகளை விடுதலைப் புலிகள் சோதனையிடுவது குறித்து அரச தரப்பின் கருத்தை அமைச்சர் தூதுக் குழுவிடம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா இராணுவமுகாம்களில் ஈ. பி. ஆர் எல். எவ், தமிழ் தேசிய இராணுவம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் தங்கியிருப்பதாக எமக்குத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. ஆகவே வெளியில் நடமாடும் இராணுவ வாகனங்களை சோதனையிட வேண்டியிருக்கிறது என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தூதுக்குழுவினர் தெரிவித்தனர்.

அப்படி வேறு இயக்கத்தவர்கள் ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களில் தங்கியிருப்பதாகக் கூறப்படுவதை அமைச்சர் மறுத்தார். (அ-உ)

## உதவி அரச அதிபர்களுக்கு மேலதிக பொறுப்புகள்

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலன்புரி உதவிப் பணிப்பாளர்களாக சகல உதவி அரசாங்க அதிபர்களும் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

அமைதியின்மை, இயற்கை அழிவு காரணமாக அரசிடம் இருந்து நஷ்டஈடு மற்றும் சலுகைகளைப் பெறுவதில் இடம் பெறும் ஊழல்களைக் கட்டுப்படுத்தும் முகமாகவே இந்த நியமனங்கள் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (உ - எ)

## தமிழ் உரிமை- --

திரை அமையட்டும் எனத் தெரிவித்தார்.

வண. தித்தகோணா வே விமலதம்ம தேரர், ஜனாப் அசீஸ், பிரம்மஸ்ரீ இ. பாலச்சந்திர குருக்கள் ஆகியோரும் ஆசியுரை வழங்கினார்கள்.

## அதிஷ்டலாபச் சீட்டு முடிவுகள்

நேற்று பிற்பகல் (22 - 05 - 90) நாயன்மார்கட்டு துர்க்கை அம்மன் தேவஸ்தான முன்றலில் நடைபெற்ற மேற்படி சீட்டிழுப்பு முடிவுகள்:

| | |
|---|---|
| 1 ஆவது பரிசு | A 2019 |
| 2 ஆவது பரிசு | B 7706 |
| 3 ஆவது பரிசு | B 19749 |

மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| [1] | A 14380 | [2] | A 24226 | [3] | A 9379 |
| [4] | B 5851 | [5] | B 18738 | [6] | A 16430 |
| [7] | A 29860 | [8] | B 10610 | [9] | A 17587 |
| | | [10] | C 30528 | | |

அதிஷ்டசாலிகள் தங்கள் பரிசிற்குரிய டிக்கட்டுக்களை பின்வரும் விலாசத்திற்கு சமர்ப்பித்துப் பரிசை பெற்றுக் கொள்ளலாம்.

**EUROPE CHINA HOTEL**
**89, 2nd Cross Street,**
**JAFFNA.**

(13259)

## 89ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**பூமணி கனகரெத்தினம்**

தோற்றம்: 14 - 10 -1929
மறைவு: 24 - 02 - 1990

திதி: அபரபக்க சதுர்த்தசி

அம்மா!

மறையவர் வேதமோத மாசிலா முரசங்களார்ப்ப
கமழு நெய்ப்பந்தம் கரந்தனிற் பிடிக்க
கற்பூர வாசனை கமழ
மைந்தன் கொள்ளிக்குடமது தூக்கி
இந்திரலோக விமானத்திலேறி
மலர் மழை வழி வழி நனைய நீவிர் சென்றனையோ?

பிரிவால் துயருறும்:

**பிள்ளைகள். சகோதரன், மருமக்கள், மைத்துனி பேரப்பிள்ளைகள்.**

நவபவனம்,
628/3, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(3622)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்பட பிரதிகள்,
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
பட அல்பங்கள், படச்சுருள்கள்
இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு:
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.,

# உதயன்

23 - 05 - 1990 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
✶ தரமான வர்ண நிழற்படபிரதி ஒன்று
3R/PC - 6/30, 5/90, 5/50
✶ விநியோகம் ஒரு வாரம் [7 Days]
★ விற்பனை - வர்ண நிழற்படச் சுருள்கள்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.



## அடிகளார் சிலைக்கு மாலை

யாழ்ப்பாணம், மே 23
வண. பிதா ரி. எம். எவ். லோங் அடிகள் ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டை யொட்டி நேற்றுக் காலை யாழ் - பொதுநூலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள அடிகளாரின்சிலைக்கு மலர்மாலை அணியும் வைபவம் நடைபெற்றது.

மன்னார் அரச அதிபர் திரு. ஏ.சி. செபநாயகம், யாழ் - மாநகரசபை ஆணையாளர் திரு. வி.பி. பாலசிங்கம், வண. மைக்கல் சுவாமி ஆகியோர் மலர் மாலை அணிவித்தனர்.

அதைத் தொடர்ந்து அடிகளாரின் உருவப்படம் தாங்கிய ஊர்வலம் இடம் பெற்றது. மூவர்ணக் கொடிகளுடன் ஏராளமானவர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் கல்லூரி வாசலை அடைந்ததும் பாண்ட் இசை முழங்க வரவேற்கப்பட்டது. (இ)

## ஆறாயிரம் முத்திரைகள் அரை மணியில் விற்பனை!

நேற்று வெளியிடப்பட்ட வண.பிதா லோங் அடிகள் ஞாபகார்த்த முத்திரைகளை மக்கள் முண்டியடித்து வாங்கினார்கள். அரைமணி நேரத்தில் 6 ஆயிரம் முத்திரைகள் விற்பனையாகின.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நேற்றுக் காலை 9 15 மணிக்கு மாகாண தபால் அத்தியட்சகர் திரு. எஸ். எம். சேதுகாவலர், முதலாவது ஞாபகார்த்த முத்திரையை இரத்துச்செய்து ஆயர் வண. வ. தியோகுப் பிள்ளையிடம் வழங்கினார்.

அதைத் தொடர்ந்து அங்கு ஏற்படுத்தப்பட்டிருந்த தற்காலிக தபால் நிலையத்தில் மக்கள் முண்டியடித்துக் கொண்டு முத்திரையையும், ஞாபகார்த்த உறையையும் வாங்கினர்.

அரைமணி நேரத்தில் ஆறாயிரம் முத்திரைகளும், 500 தபால் உறைகளும் விற்பனையாகின என தபால் அதிபர் தெரிவித்தார். (உ-3)

## ஆங்கில அக்கடமியின் சான்றிதழ் வழங்கும் விழா
### பிரி. தூதுவர் பிரதம விருந்தினர்

யாழ்ப்பாணம், மே 23
யாழ்ப்பாணம் ஆங்கில அக்கடமியின் சான்றிதழ் வழங்கும் விழா, நாளை வியாழக்கிழமை நடைபெறுகிறது. இந்த விழாவில் பிரிட்டிஷ் தூதுவர் திரு. டேவிட் கிளாட்ஸ்ரனும் அவரது பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

நாளை பிற்பகல் நான்கு மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் பிரஸ்தாப விழாவில், யாழ்ப்பாணம் ஆங்கில அக்கடமியில் பயின்று லண்டன் ஆங்கிலப் பரீட்சைகளில் பயின்றவர்களுக்கு திருமதி எப்ரில் கிளாட்ஸ்ரன் சான்றிதழ்களை வழங்குவார்.

யாழ்ப்பாணம் ஆங்கில அக்கடமியின் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரிட்டிஷ் தூதுவர் திரு. டேவிட் கிளாட்ஸ்ரன், யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட், உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. குலசேகரன் ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள்.

வின்சன்ட் குழுவினரது பரதநாட்டியம், வீணை இசை, அக்கடமி மாணவர்களின் ஆங்கில நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும்.

யாழ்ப்பாணம் ஆங்கில அக்கடமி மாணவர்களால் அன்றிரவு அளிக்கப்படும் இராப்போசன விருந்திலும் பிரிட்டிஷ் தூதுவர் தம்பதியர் கலந்துகொள்வர்.

## புத்தகக் கண்காட்சி இன்று முதல் சனிவரை

யாழ்ப்பாணம், மே 23
அமெரிக்கத் தகவல் சேவைப் பிரிவு, யாழ். பொது நூல் நிலையத்துடன் இணைந்து நடத்தும் ''அமெரிக்க உயர் கல்வித்துறையில் நிகழும் மாற்றங்கள்'' சம்பந்தமான புத்தகக் கண்காட்சி நாவலர் கலாசார மண்டபத்தில் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜாவினால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும்.

நாளை 24 ஆம் திகதியும் 25, ஆம் 26, ஆம் திகதிகளிலும் காலை 9.30 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை பொதுமக்கள் கண்காட்சியை இலவசமாக பார்வையிடலாம்.

அமெரிக்க மாணவர்களின் கல்விமுறை, அமெரிக்காவில் கல்விபயிலும் வெளிநாட்டு மாணவர்களின் கல்விமுறை போன்ற பல விடயங்களை விவரிக்கும் நூல்கள், அமெரிக்க நாட்டு கல்வி சம்பந்தமான சுவரொட்டிகள் என்பன இக் கண்காட்சியில் இடம்பெறும்.

அமெரிக்காவின் மிகப்பிந்திய கல்வி முறைகள், விஞ்ஞானக் கல்விப் போதனை சம்பந்தமாக விளக்கும் பல நூல்களும் கண்காட்சியில் இடம் பெறுவதாக அதன் ஏற்பாட்டு அதிகாரிகளில் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (அ-7)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# யாழ். நூலகமும் பலாலி விமான நிலையமும் லோங் அடிகளார் நினைவு கூரும் சின்னங்கள்

### முத்திரை வெளியீட்டில் யாழ்.ஆயர்

யாழ்ப்பாணம், மே 23
'தமிழ்மக்களின் கல்வி அபிவிருத்திக்கு மட்டுமல்லாது மக்களின் தேவைகளை அறிந்து அவற்றிற்காக நன்னாலான அரும் பெரும் சேவை செய்த மாவீரர் வண பிதா. லோங்அடிகள். யாழ். நூலகமும், பலாலி விமான நிலையமும் அவரை நினைவு கூரும்சின்னங்களாக அமைந்துள்ளன.

யாழ். ஆயர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி தியோகுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நேற்றுக் காலை நடைபெற்ற வண. பிதா ரி. எம். எவ். லோங் அடிகளாரின் முத்திரை வெளியீட்டுவைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் வண. பிரான்சிஸ் ஜோசேப் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் ஆயர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

அடிகளார் இந்தக் கல்லூரியின் அதிபராக இருந்த போதும், மக்களின் தேவைகளை, அவர்களின் கஷ்டங்களை உணர்ந்து அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கினார்.

யாழ்ப்பாண நூலகத்தை அமைத்ததும்,பலாலி விமான நிலையத்தை பொது விமான நிலையமாக்கியதும் அவர் ஆற்றிய உயர்பணிகளை எடுத்துக்காட்டி நிற்கின்றன. அவரின் ஞாபகார்த்த சின்னங்களாக அவரை ஞாபகப்படுத்தி நிற்கின்றன,

யாழ்ப்பாணமக்களின் வாழ்க்கைநிலையை கார்ட்டூன் மூலமாக தன் நாட்டுமக்களுக்கு உணர்த்தி, அதன் மூலம் உதவிகளைப் பெற்று மக்கள் உயர்வுக்காகப் பணிபுரிந்தார்.

இப்படி அவர் கூறினார்.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் பேசுகையில் வண பிதா லோங் அடிகளார் இந்த கல்லூரியின் தலைவராக இருந்து ஆளுமையுள்ள சமுதாயம் உருவாக உழைத்ததுடன் யாழ். பிரதேச மக்களுக்காகவும், முழு இலங்கை மக்களுக்காகவும் உழைத்தவர் என்றார்.

மாகாண தபால் அத்தியட்சகர் திரு. எஸ். எம். சேதுகாவலர் உரையாற்றுகையில் நாவலர், விபுலானந்தர், ஞானப்பிரகாசர் ஆகியோருக்கு முத்திரை வெளியிட்டுக் கௌரவிக்கப்பட்டது. அவர்கள் எம்பிரதேசத்தவர்கள் என்றதில் பெருமையடைந்தோம். ஒரு வெளிநாட்டவருக்கு எம்மக்கள் சேவைக்காக முத்திரை வெளியிடப்படுவது பாராட்டப்பட வேண்டும் என்றார்.

மன்னார் அரச அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம், வைத்தியகலாநிதி, ஜே பி.சி பிலிப்ஸ், செல்வன் பி. சி. பிரதீபன், திரு. பீ. ஞானரத்தினம் ஆகியோர் உரையாற்றினார்கள்.

யாழ்மாநகரசபை முன்னாள் மேயர் திரு. எம். எஸ். பேரின்பநாயகம் ஆயரிடம் இருந்து விஷேட மலரைப் பெற்றார். (இ-3)

## ஜே.வி.பி. பேரில் இயங்கிய கொள்ளையர் சிக்கினர்!

ஜே வி பி என்ற போர்வையில் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் 60 லட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் பொருட்களைக் கொள்ளையடித்ததாக கூறப்படும் கோஷ்டி ஒன்றின் தலைவரை இரகசியப் பொலீஸார் கைது செய்தனர்.

இத்தலைவர் 'சுதா' என்று அழைக்கப்படுகிறார். இவரது தந்தைஓர் ஆங்கிலேயர். தாய் இலங்கைப் பிரசை.

இந்தக் கோஷ்டியில் ஆறு பேர் இருந்தனர்.

ஜே.வி பி நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தில் இருந்த சமயம் இக்கோஷ்டி செயல்பட்டு வந்ததாகக் கூறப்பட்டது. (உ-எ)

### யாழ்ப்பாணம் அனுப்பப்படும்
## வெளிநாட்டு காசோலைகளை திருடும் குழு பற்றித் தகவல்

யாழ்ப்பாணம், மே 23
யாழ்ப்பாணத்துக்கு வெளிநாடுகளில் இருந்து அனுப்பி வைக்கப்படும் காசோலைகளைத் திருடி கொழும்பு வங்கிகளில் பணமாக மாற்றிவரும் கோஷ்டி ஒன்றைப் பொலீஸார் கண்டுபிடித்திருப்பதாகத் தெரியவருகிறது.

வெளிநாட்டில் இருந்து வந்த காசோலை ஒன்று கையாடப்பட்ட விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட புகாரை அடுத்தே இந்தக் கோஷ்டிபற்றிய தகவல்கள் வெளிவந்ததாக அறியவருகிறது.

யாழ். தபால் நிலையத்தில் கடமைபுரியும் ஊழியர்கள் மூலமாக அரியாலையைச் சேர்ந்த ஒருவர் காசோலைகளைச் சுருட்டிவந்தார் என்றும் —

பின்னர் அவற்றைக்கொழும்பில் உள்ள முஸ்லீம் வர்த்தகர் ஒருவர் மூலமாக பணமாக மாற்றிவந்தார் என்றும் தற்போது தெரியவந்திருக்கிறதாம்.

இதுவரை சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான காசோலைகள் இப்படி மாற்றப்பட்டிருக்கக்கூடுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. (உ-3)

### உதவி வழங்குவது குறித்து
## நெதர்லாந்து பிரதிநிதிகள் யாழ். வந்து ஆராய்வு!

யாழ்ப்பாணம் மே 23
நெதர்லாந்து அரசின் பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தது.

நெதர்லாந்து அரசு வழங்கும் உதவிகளை, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இயங்கும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக வழங்குவது பற்றி ஆராயவே இந்தக்குழு இங்கு வந்திருப்பதாகத் தெரியவந்தது.

இந்தக் குழுவுக்கு திரு. ஹாங் என்பவர் தலைமை வகிக்கிறார்.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் தன்மை, தகுதி ஆற்றல் ஆகிய விவரங்களைஇந்தக் குழுஆராய்ந்தது.

பல அமைப்புக்களின் பிரதிநிதிகளைச்சந்தித்துப் பேச்சு நடத்தியபின் இந்தக்குழு நேற்று கொழும்பு திரும்பியது

இந்தக் குழுவில் நெதர்லாந்து அரசு பிரதி நிதிகளுடன் அந்நாட்டு அரசுசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இடம் பெற்றிருந்தனர். (உ-3)

### குமண காட்டுப்பகுதியில்
## ஈ.பி.ஆர்.எல். எவ்விடம் பயிற்சி பெற்ற சந்தேக நபர் கைது

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர் ஒருவரை 9 மில்லிமீற்றர் பிஸ்டலுடன் வெள்ளவாயாவில் வைத்து பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர்.

சந்தேக நபரான எம். எம் குணரத்தின ஈ.பி.ஆர். எல். எவ். பினரிடம் இருந்து இந்த பிஸ்டலை ர[illegible] வாங்கியதாகச் சொல்லப்பட்டது.

குமண பகுதியில் ஈ. பி. ஆர். எல். எவ். பயிற்சியாளர்களிடம் இச் சந்தேகநபர் பயிற்சி பெற்றார் என்றும் விசாரணையில் தெரியவந்ததாக [illegible] பத்திரிகைச் செய்தி வெளியிட்டது. (உ-எ)

## துப்பாக்கியை பறிக்க முயன்றவர்

கொழும்பு, மே 23
இலங்கை இராணுவ வீரர் ஒருவரிடம் இருந்து துப்பாக்கியைப் பறிக்க முயன்றதாகக் கூறப்படும் ஜே. வி. பி உறுப்பினர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரை அனுராதபுரம் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

தீவிரவாதிகளின் முகாம் ஒன்றைக் காட்டித் தருவதாகக் கூறி இச் சந்தேக நபர் பாதுகாப்புப் படையினரைக் காட்டுக்குள் அழைத்துச்சென்றாராம்.

அப்போதே இச் சம்பவம் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## இன்று தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், மே 23
வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா இன்று புதன்கிழமையும், தீர்த்தத் திருவிழா நாளை வியாழக்கிழமையும் காலை 6-00 மணிக்கு நடைபெறும். (இ-7)

## வட்டி குறைப்புக்கு எதிர்ப்பு

கொழும்பு, மே 23
ஊழியர் சேமலாப 3வட்டி வீதத்தை 13 சத வீதத்தில் இருந்து 11 சத வீதமாக குறைக்கும் நடவடிக்கைக்கு தொழிற்சங்கங்களும் ஊழியர்களும் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். (இ-எ)

## சீ பிளேன்

வல்வெட்டித்துறை, மே 23
ஹர்த்தால் தினமான திங்கட்கிழமை மாலை மூன்று மணி அளவில் பருத்தித்துறை அல்வாய் திக்கம் ஆகிய பகுதிகளின் மேலாகவும் பின்னர் பொலிகண்டி வல்வெட்டித்துறை உடுப்பிட்டி ஆகிய பகுதிகளின் மேலாகவும் கடற்பிராந்தியத்தின் மேலாகவும் சீ பிளேன் வட்டமிட்டுச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது. (இ-160)

## ராணுவ முகாம் மீண்டும் திறக்கப்பட்டது

கொழும்பு, மே 23
மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக் குடியில் அண்மையில் மூடப்பட்ட இலங்கை இராணுவமுகாம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இம்முகாம் கடந்த திங்கள் முதல் மீண்டும் இயங்கத் தொடங்கியது.

இதே வேளை மட்டக்களப்பு விமான நிலையத்திற்கு விமானங்கள் அடிக்கடி வந்து போவதாகவும் ஹெலிக்கொப்டர்கள் தாழப்பறந்து செல்வதாகவும் சொல்லப்படுகிறது. (உ எ)

## கொள்ளை!

கொழும்பு, மே 23
கொழும்பு, கொட்டாஞ்சேனைபெனடிக்ற் மாவத்தையில் உள்ள வீடு ஒன்றினுள் துப்பாக்கிகளுடன் புகுந்த நால்வர் சுமார் 7 லட்சம் ரூபா பெறுமதியான பணம் நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராணுவச் சிப்பாய்கள் சிலர் இச்செயலில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படுகிறது. (உ-எ)

## ஜனாதிபதி விருது பெற்ற தமிழர் - முஸ்லிம்கள்

கொழும்பு ,மே 23
தேசிய வீரர்கள் தினத்தை ஒட்டி ஜனாதிபதியால் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட தமிழர்கள் மற்றும் முஸ்லிம்பிரமுகர்கள் வருமாறு;

**தேசமான்ய**
1. திரு. பி.மகாதேவா. 2. அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்

**வித்யாஜோதி**
1. டாக்டர் எம். யு எஸ். சுல்தான் பாவா (கிழக்கு மாகாண பல்கலைக்கழக வேந்தர்).

**கலாகீர்த்தி**
1. டாக்டர் ஏ. கந்தையா.

**தேசபந்து தரம் - 1**
1. திரு. எஸ். செல்லமுத்து. (கொழும்பு மாநகர சபையின் முன்னாள் மேயர்).

**தேசபந்து தரம் - 2**
1. ஜனாப் ஆயிஷா ரஊப், 2 ஜனாப் எம். எஸ். சபூர் - பத்திரிகையாளர், 3. டாக்டர் சுரேந்திரா இராமச்சந்திரன், 4. திரு. ஏ ஏ. ஜோஜ் - தலைவர், சிலோன் தியேட்டர்ஸ் லிமிட்.

**கலாசூரி தரம் - 1**
1. செல்வி வாசுகி சண்முகம்பிள்ளை — பரதநாட்டிய வித்பன்னர்.

**ஸ்ரீலங்கா சிகாமணி தரம்-1**
1. ஜனாப் எம். வை. எம் தாஹிர், 2. திரு. ரி. சோமசேகரம், மேலதிக நில அளவையாளர் நாயகம். (இ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரஸ்வதி செல்லையா

சாளம்பை, தம்பசெட்டி, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி செல்லையா 21 - 05 - 90 இல் காலமானார். அன்னார் முருகேசு செல்லையாவின் (முன்னாள் சுகாதார பரிசோதகர்) அன்புமனைவியும், திரு. திருமதி கோவிந்தப்பிள்ளையின் அன்பு மகளும், பசுபதியின் அன்புச் சகோதரியும், கோகுலராணி, ஜெயகுலராணி, மனோகரன், (கண்ணன்) சுகிர்தராணி, சுரேஸ்கரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகடாட்சம் (புகையிரத நிலைய அதிபர் செட்டிக்குளம்) சிவானந்தராஜா, (பிரபல வர்த்தகர், தம்பையா ஸ்ரோர்ஸ், ஏறாவூர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சஞ்சீவன், தரஜன்,லோசஜன், நிருஜா ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 22 - 05 - 90 செவ்வாய் பி . ப 5 . 00 மணிக்கு புலோலி மேற்கு மயானத்தில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்
முருகேசு செல்லையா.

சாளம்பை,
தம்பசெட்டி,
பருத்தித்துறை.

(13262)

### திருமதி அகிலாண்டநாயகி நமசிவாயம்

திருமதி அகிலாண்டநாயகி நமசிவாயம் 22 05-90 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற முதலியார் நமசிவாயம் அவர்களின் அன்பு மனைவியும், சரஸ்வதி கனகசபை, காலஞ்சென்ற சரோஜினிதேவி, லோகேந்திரா, நமசிவாயம், சாரதாதேவி பத்மினிதேவி கனகசபை, சுகிர்தாதேவி குமாரதாஸ் மாப்பாண முதலியார் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார். ஈமக்கிரியைகள் 23 - 05 - 90 புதன்கிழமை காலை 114 A கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

114 A, கோயில் வீதி,
நல்லூர்.

(13247)

### திருமதி மாணிக்கம் அம்பலவாணர்

திருமதி மாணிக்கம் அம்பலவாணர் 22-05-90இல் காலமானார். இவர் பிரபல நகை வியாபாரி திரு. பொ. அம்பலவாணரின் அன்பு மனைவியும், இராசலிங்கம், சுந்தரலிங்கம், திருமதி புவனேஸ்வரி சாயுச்சிய தேவன் (Canada), சரோஜினிதேவி பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகராணி இராசலிங்கம், Dr. சாயுச்சியதேவன் ஆகியோரின் அன்பு மாமியும், துசேந்தா, சியாமளா, சுமந்தினி ஆகியோரின் அன்புப் பாட்டியும், காலம்சென்ற S. K. சுப்பிரமணியம், திருமதி சிவபாக்கியம் வேலுப்பிள்ளை S. K. கனகசபை (Colombo), S. K. காசிப்பிள்ளை (London), திருமதி இராசம்மா வேலாயுதபிள்ளை, காலம்சென்ற S. K. நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை (23-5-90) மாலை 4-00 மணியளவில் இல. 160 நாவலர்வீதி இல்லத்தில் நடைபெற்று கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்
பொ. அம்பலவாணர்
[13248]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org